திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

இதழ் : 8 25-3-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 33

திண்டுக்கல்

பாண்டியன் நாடக மன்றம்

தரும் மகத்தான கலைவிருந்து

●

எடுத்துக்காட்டு!

(நாடகம்)

கதை வசனம்: மா. நல்லுச்சாமி

(மா. தங்கவேலின் தமையனார்)

பாடல்கள்: மகிமைதாசன்

●

27—3—55 இரவு 10-மணிக்கு

திண்டுக்கல் வ. உ. சி. திடலில்

கம்யூனிஸ்டுகளுக்கு புத்தி வந்ததாம்!

சலுகை காட்டுமாறு சர்க்காரை கெஞ்சுகிறார் கல்யாணசுந்தரம்!

இந்தியத் துணைக் கண்டத்திலேயுள்ள கம்யூனிஸ்டுகளின் 'போக்கு மிக மிக விசித்திரமான தென்றால் நம் தென்னாட்டுக் கம்யூனிஸ்டுகளின் பேச்சும் நடவடிக்கைகளும் அந்த விசித்திரத்திலும் அலாதியானதென்றே கூறலாம்! ஏனெனில் அனைத்திந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்தை அலங்கரித்துவரும் வடநாட்டுத் தலைவர்களின் குரலுக்கேற்ப கூத்தாட வேண்டிய நிலையிலிருப்பதால், தென்னாட்டுக் கம்யூனிஸ்டுகள் அறிவுக்கும் அரசியல் நேர்மைக்கும் மாறான வகையிலே தங்களின் கண்ணோட்டத்தைச் செலுத்தவேண்டியவர்களா யிருக்கின்றனர்!

தென்னாட்டுக் கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டம் இருக்கிறதே ஒரே பிரச்னையில், ஒரு இடத்தில் பரந்தும், மற்றொரு இடத்தில் பழுதுபட்டும், இன்னுமொரு இடத்தில் குறுகியும் காட்சியளிக்கும்!

ஆவடி மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட 'மாதிரி சோஷலிஸம்' தீர்மானமானது வளர்ந்து வரும் மக்கள் சக்தியைச் சிதைவுறச் செய்யும் ஓர் சூழ்ச்சி, —தந்திரம் என முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும், ஏன் காங்கிரசிலேயுள்ள ஒரு சிலரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

ஆனால் தென்னாட்டுக் கம்யூனிஸ்டுகள் அந்த 'மாதிரி சோஷலிஸத்' தீர்மானத்தைக் கண்டு பரம திருப்தி அடைந்து விட்டார்களாம்! அதுமட்டுமா? தங்கள் நோக்கம் எதுவோ அதனை காங்கிரஸ் சர்க்காரே நடைமுறையில் கொண்டு விட்டதால், இனி அரசியல் துறையில் ஆக்கவேலை செய்வதென்றும் 'மாதிரி சோஷலிஸ'த்தை மனப்பூர்வமாக ஆதரிப்பதாகவும், சர்க்காரை இனி கண்டபடி எதிர்க்கப் போவதில்லை யென்றும், எனவே சர்க்காரும் தங்கள் கட்சியைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல் அருள் கண்கொண்டு பார்க்கவேணுமென்றும் தங்களின் முன்னைய போக்கை மாற்றிக் கொண்டு விட்டதாகவும் சென்னை சட்டசபையின் 18-3-55-ம் தேதி கூட்டத்திலே எதிர்க்கட்சியின் துணைத்தலைவரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவருமான தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் பிரலாபித்திருக்கிறார்!

இந்த அளவோடு தமது பேச்சினை முடித்துக் கொண்டிருந்தால் கூட நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏதோ கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு ஏற்பட்ட இந்த நல்ல புத்தி நீடித்திருக்க மரத்தடி பிள்ளையார் அருள்புரியட்டும் என்று விட்டிருக்கலாம்.

ஆனால் தோழர் கல்யாணசுந்தரம், ஆவடி காங்கிரசின் மாதிரி சோஷலிச தீர்மானத்தால் தமது கட்சியினருக்கு ஏற்பட்ட மனமாற்றத்தையும் நல்ல புத்தியையும் சர்க்காருக்கு தெரிவித்து விட்டு இதற்காக குறைந்தபட்ச பேரம் செய்ய முற்பட்டிருக்கிறார்!

அது என்ன தெரியுமோ! "கம்யூனிஸ்ட்கட்சியின் நடவடிக்கைகள் மாறி வருவதாலே, ஆக்க வேலையில சர்க்காரைத் தாங்கிப் பிடிக்கப் போவதாலே இந்த நல்ல நேரத்தையாவது எண்ணிப் பார்த்து சிறையிலுள்ள கம்யூனிஸ்ட் கைதிகளை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறேன் என்பதுதான் கம்யூனிஸ்டு தலைவர் கல்யாணசுந்தரம் சர்க்காரிடம் பேசிய குறைந்தபட்ச பேரம்!

தோழர்களே—மாஸ்கோ வைத்தியம் பெற்ற கம்யூனிஸ்டு தலைவரின் தீவிர வாதத்தைப் பார்த்தீர்களா! தோழர் கல்யாணசுந்தரம் இந்த அளவோடு தமது கட்சியின் மனமாற்றத்தையும் குறைந்த பட்ச பேரத்தையும் சொல்லி நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா! ஆனால் அவர் மேலும் பேசுகையில்,

காங்கிரஸ் தலைவர்கள் 'மாதிரி சோஷலிஸம்' தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்குக் காரணம் கம்யூனிஸ்டு கட்சி தான் என்று பீத்திக் கொண்டார்!

இதைக் கேட்டவுடனே நிதிஅமைச்சர் சுப்ரமண்யம் அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. குப்புற வீழ்ந்துவிட்டு மீசையில் மண் ஒட்டவில்லை பார்த்தீர்களா என்றானும் ஒரு பேர்வழி! அதைப் போல இந்த கம்யூனிஸ்ட் தலைவர் பேச்சும் செயலும் இருக்கிறதேயென்று எண்ணி சுடச்சுட சூடும் கொடுத்திருக்கிறார்!

'கம்யூனிஸ்டுகள் தங்களின் பழைய சுபாவங்களிலிருந்தும், போக்கிலிருந்தும் திருந்தி சட்டத்திற்குட்பட்டு இயங்கும் கட்சியினராக அவர்களை மாற்றிய பெருமை காங்கிரஸையே சாரும். கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பயந்து 'மாதிரி சோஷலிஸம்' தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றவில்லை. காங்கிரஸின் அடிப்படைக் கொள்கையே சோஷலிஸம் தான்! இதை கம்யூனிஸ்டுகள் கவனத்தில் வைக்க வேண்டும். எந்த வகையிலோ இன்று கம்யூனிஸ்டுகள் மனமாற்றம் அடைந்திருப்பதை வரவேற்கிறேன். ஆனால் இந்நிலை நீடித்திருக்க வேண் வேண்டும்

அதுமட்டுமல்லாமல், தங்கள் கட்சியின் போக்கு மாறிவிட்டதால் தங்கள் கட்சியினரை ஜெயிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கம்யூனிஸ்ட் தலைவர் கூறுகிறார். இந்தப் பிரச்னையை கட்சிக் கண்கொண்டோ அரசியல் பேரத்தைப் போலவோ கவனிக்க முடியாது. யாராயிருப்பினும் சட்டத்தையும் நாட்டுப் பிரஜை என்பதையும் முன்வைத்துத்தான் இதனை யோசிக்கப்படும். இதில் கட்சி சலுகை காட்ட முடியாது" என்று கூறியிருக்கிறார் நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள்!

அமைச்சரின் இந்த பதிலுக்கு கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் வாய திறக்கவேயில்லை! "மாதிரி சோஷலிஸ" தீர்மானத்தைக் கண்டே கம்யூனிஸ்ட் தலைமையின் மேல்மாடி குழம்பிவிட்டது! ஆதலாலே காங்கிரசின் காலடியில் தஞ்சமடைந்து "குறைந்தபட்சம் பேரமும்" பேசுகிறது.

பரிதாபம்—பரிதாபம்! குறைந்த பட்ச திட்டத்திலிருந்து குறைந்தபட்ச பேரத்திற்கு தென்னாட்டுக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் தங்களின் புத்தியை திருத்திக் கொண்டனராம்!!

இதனால்தான் நாம் அடிக்கடி கூறி வருகிறோம். இங்குள்ள கம்யூனிஸ்டுகள் —உண்மையான கம்யூனிஸ்டுகள் அல்ல, So-Called கம்யூனிஸ்டுகள் என்று! ஆதலாலேதான் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் அரசியல் செப்படி வித்தையாகிய "மாதிரி சோஷலிஸத்தை"— இந்த "மாதிரி கம்யூனிஸ்டுகள்" மனப்பூர்வமாக வரவேற்கிறார்கள்!

அப்படி ஆதரிப்பதைக்கூட நாம் குறைகூறவில்லை, ஏதோ வடநாட்டுத் தலைமையின் உத்திரவுக்கு இங்குள்ள கம்யூனிஸ்டுகள் கீழ்ப்படிய வேண்டியவர்கள்தானே! இவர்களாக அறிவுக்கு வேலை கொடுத்து சிந்தித்து—நம் தென்னாட்டைப் பொறுத்தவரை ஆவன செய்ய சக்தியற்றவர் களாகத்தானேயிருக்கிறார்கள்!

எனவே நாம் அதைப்பற்றிக்கூட பொருட்படுத்தவில்லை! ஆனால் 'மாதிரி சோஷலிஸத்தை' ஆதரிப்பதாகக்காட்டி —'எங்கள் கட்சியினரை விடுதலை செய்து விடுங்கள்' என்று 'மடிபிச்சை' எடுக்கின்றனரே தென்னாட்டுக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள்! இந்நிலை கெட்ட மாந்தரின் போக்கை நினைத்துக் கொண்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே.

—நக்கீரன்

●

"அரசியல் குடுகுடுப்பை!"

நிலச்சீர்திருத்த சட்டம் குறித்து காமராசர் சர்க்கார் சத்தம் போடுவதுதான் பிரமாதமா யிருக்கிறதேயன்றி செயல்முறையில்...!

சென்னை மாவட்ட தி.மு. கழகக் கிளைகளின் தேர்தல் (27-3-55)

தேர்தல் நேரமும்—அதிகாரிகளின் விவரமும்

வட்டம்	வட்டத்தின் பெயர்	நேரம் (மணி)	அதிகாரியின் பெயர்
1	தண்டையார்பேட்டை	காலை 9	ஏ. ஜெயராஜ்
2	இராயபுரம்	மாலை 4	டி. ஏ. வெங்கிடாசலம்
3	சிங்காரத்தோட்டம்	காலை 9	கோ. இளவரசு
4	வண்ணாரப்பேட்டை	காலை 9	அலுமேலு அப்பாதுரை
5	கொருக்குப்பேட்டை	காலை 9	வி. இளஞ்சேரலாதன்
6	பெரம்பூர்	காலை 9	மு. சண்முகம்
7	மூலக்கொத்தளம்	காலை 9	அமிர்தநாதன்
8	பெத்துநாயக்கன்பேட்டை	காலை 9	பி. அண்ணமலை
9	ஏழுகிணறு	காலை 9	அழகுமலை
10	அம்மன்கோயில்	மாலை 4	சேதுராசன்
11	முத்தியாலுபேட்டை	மாலை 4	சானகிராமன்
12	ஆர்பார்	மாலை 4	தி. சு. நல்லதம்பி
13	கச்சாலீஸ்வரர்கோயில்	மாலை 4	கே. பி. நடராசன்
14	கொந்தவால்சாவடி	மாலை 4	ஏ. கே. சாமி
15	சௌகார்பேட்டை	மாலை 4	வெங்கட்ராமன்
17	சூளை	மாலை 4	கிள்ளிவளவன்
18	புளியந்தோப்பு	காலை 9	வி. ராமசாமி
19	ஓட்டேரி	காலை 9	இளம்பரிதி
20	செம்பியம்	மாலை 4	நெடுமாறன்
21	அயன்புரம்	காலை 9	ஆர். டி. அரசு
22	கீழ்பாக்கம்	காலை 9	கே. லா. சந்திரமோகன்
23	புரசைவாக்கம்	மாலை 4	ஆடலழகன்
24	குயப்பேட்டை	மாலை 4	சி. ஆர். பாலசுந்தரம்
25	வேப்பேரி	காலை 9	கே. ச. சம்பந்தம்
26	பெரியமெட்	காலை 9	நாஞ்சில் ஜேவியர்
28	பார்க்டவுன்	காலை 9	ஏ. கண்ணப்பன்
29	நேப்பியர்பார்க்	காலை 9	ராகவன்
30	சிந்தாதிரிப்பேட்டை	காலை 9	காஞ்சி. மணிமொழியார்
31	கோமளீஸ்வரன்பேட்டை	மாலை 4	நலங்கிள்ளி
32	எழும்பூர்	மாலை 4	மணிவண்ணன்
33	சேத்துப்பட்டு	மாலை 4	ராசேந்திரன்
34	நுங்கம்பாக்கம்	காலை 9	வி. எஸ். கோவிந்தராசன்
35	கோடம்பாக்கம்	காலை 9	ஏ. எஸ். சுந்தரமூர்த்தி
37	இராயப்பேட்டை	மாலை 4	புருடோத்தமன்
39	மவுண்ட்ரோடு	காலை 9	இராவணன்
40	சேப்பாக்கம்	மாலை 4	வேணுகோபால்
42	திருவல்லிக்கேணி	மாலை 4	வேந்தன்
43	மீர்சாகிப்பேட்டை	காலை 9	பூ. அரங்கசாமி
44	மைலாப்பூர்	காலை 9	தெ. பாண்டியன்
46	தேனும்பேட்டை	மாலை 4	அ. பொ. அரசு
48	சைதாப்பேட்டை	மாலை 4	கோதண்டராமன்
50	அடையார்	மாலை 4	கே. கோவிந்தசாமி
	ஆலந்தூர்	காலை 9	என். சி. மணி
	திருவொற்றியூர்	காலை 9	செங்குட்டுவன்
	கொடுங்கையூர்	காலை 9	ஏகாம்பரம்
	மாதவரம்	மாலை 4	மதியழகன்
	புழல்	காலை 9	சு. பாலன்
	செங்குன்றம்	மாலை 4	டி. கே. சண்முகம்

கே. எம். கண்ணபிரான்
செயலாளர் சென்னை மாவட்ட தி. மு. கழகம்.

பம்பாய்

●

செள. பா. பகுத்தறிவு மன்றம்

10-3-55 மாலை 7 மணிக்கு சௌந்திரபாண்டியனுர் பகுத்தறிவு மன்ற சார்பில் பாண்டியனுர் நினைவு நாள் கூட்டம் அன்பகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு நாஞ்சில் ஜி ராசாமணி அவர்கள் தலைமை தாங்கினுர்கள் தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள்: சி. த. மு. இரா. ஆரியசங்காரன், பி. செண்பகபாண்டியன், புத்தரசு, டி. வி. துரை, யோ. தர்மராசன். ஆகியோர்கள் தமிழ் நாட்டிற்கும், தமிழர்களுக்கும் சௌந்திர பாண்டியனுர் செய்த சேவைகளை விளக்கிப் பேசினுர்கள். அண்ணுவின் மைத்துனர் அரங்கநாதன், பி. பெரியசாமி, கவிஞர் கண்ணதாசன் தந்தை சாத்தப்பன், பேராசிரியர் பி. வி. நாராயணசாமி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பம்பாய் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் பொதுக்கூட்டம்

பம்பாய் தாராவித் தாழ்த்தப்பட்டோர் சம்மேளன பொதுக்கூட்டம் 12—3—55 மாலை 5-30 மணிக்கு சம்மேளனத் தலைவர் கே. எம். விஸ்வநாதன் அவர்கள் தலைமையில் கட்டவாடி மைதானத்தில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர்கள் பி. பி. கணபதி, எஸ். எம். சித்தார்த்தன், எம்.கே. சுப்பையா, எம். எ. சண்முகராஜா, பி. எஸ். கோவிந்தன் ஆகியோர்கள் சம்மேளனம் இயங்கி வரவேண்டியதின் அவசியம் பற்றி மிகத் தெளிவாக கூறினுர்கள்.

குறிப்பிட்டபடி பம்பாய் மாநிலத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் ஆர். டி. பண்டாரே எம். எ. எல். எல். பி. அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமையினுல் சென்னையிலிருந்து வந்திருந்த எம். ஆர். பச்சையப்பன், எஸ். சற்குணம் ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:—

திருநெல்வேலி ஜில்லா சாத்தான் குளம் என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை போலீசார் துன்புறுத்தியது பற்றியும் காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் தாழ்த்தப்பட்ட மக்களை கட்டிவைத்து மிகக் கீழ்த்தரமாக கொடுமைகள் செய்தது பற்றியும் சென்னை சட்டசபையில் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்ட ஏ. ரத்தினம் எம். எல். ஏ., வடிவேல் எம். எல். ஏ. ஆகியோர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது. இதுசம்பந்தமாக தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்ட திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகா ஜனசங்கத்தையும் இக்கூட்டம் பாராட்டுகிறது. ஆனுல் அதே ஜில்லாவிலிருந்து சட்ட சபைக்குச் சென்ற மூன்று தாழ்த்தப்பட்ட எம். எல். ஏக்கள் இது விஷயமாக யாதொரு நடவடிக்கையும் எடுக்காததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தாழ்த்தப்பட்டோர்கள் நலனுக்காகப் பாடுபட்டு வரும் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் என்ற ஸ்தாபனம் இருக்கும்போது 'தாழ்த்தப்பட்டோர்' என்றதொரு கட்சியை ஏற்படுத்த நம்மவர்களின் ஒற்றுமையைக் குலைப்பதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

பம்பாய் கொலாபா

11-3-55 அன்று கொலாபா தி. மு. கழக மாதாந்திரக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. கணக்கு வழக்குகளை சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. கழகத்தின் பொருள் அஞ்சலில் போட்டு வைப்பதென பல தோழர்களின் அபிப்ராயத்துடன் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றிநவில கூட்டம் இனிது முடிவுற்றது.

கேள்வி? பதில்.

அஞ்சா நெஞ்சன்

விலகியவர்கள் குறித்து கேள்வி?

கே : அஞ்சா நெஞ்சனே மதுரை நகரில் சிலபேர் தி. மு. கழகத்திலிருந்து விலகியதைப்பற்றி பத்திரிகைகளில் வதந்தி உலவுகிறதே உண்மையா? விலகியதற்கு முக்கிய காரணம் யாவை?

—கோ. கண்ணதாசன், பெங்களூர்-3.

ப : தோழரே, மதுரை தி. மு. கழகத்திலிருந்து சிலர் விலகிவிட்டனர் என்பது உண்மைதான். இப்படி விலகியவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் யான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. அம்முறை தவறுங்கூட. பண்பற்றவர்கள்தான் ஒருகட்சியிலே யிருக்கும்போது எங்கள்............விட தன்மையிலும், பண்பிலும், அறிவிலும் யார் இருக்கிறார்கள் இந்த நாட்டிலே என்று பேசுவதும், கட்சியைவிட்டு விலகியவுடனே கண்டவாறு தூற்றுவதுமான இழிக்குணத்தைக்காட்டுவார்கள். எந்தக் கட்சியினரா யிருப்பினும் அக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டாலோ அல்லது தாங்களாகவே விலகிக் கொண்டாலோ கொள்கையை முன்வைத்துப்பேசவேண்டுமே யல்லாது குறிப்பிட்ட ஒருவரையோ சிலரையோ பழித்துப் பேசுவது நாகரீகமாகாது. இதை மற்றவர்கள் உணர்கிறார்களோ இல்லையோ என்றாலும் தி. மு. கழகத்திலுள்ளவர்கள் கூடுமான வரை பொதுப்பணியிலே இந்த நாகரீகத்தைக் கடைப்பிடித்தே வருகிறோம். எனவே விலகிச் சென்றவர்கள் என்று கூறப்படுபவர்கள் யாரா யிருப்பினும் அவர்களைத் தனிப்பட்ட வகையில் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

மதுரை நகர் தி. மு. கழகத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் மீது மதுரை மாவட்டக் கமிட்டியின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 20—2—55-ல் முடிவு செய்யப்பட்டது. இதற்கு முன்பே இரண்டொருவர் மீது மதுரை நகர தி. மு. கழகமே நடவடிக்கை எடுத்து—கட்சியிலிருந்து விலக்கியும் வைத்து அதனை தலைமைக் கழகத்திற்கும் அனுப்பி யிருக்கிறது.

எனவே மாவட்டக் கமிட்டியின் முடிவுக்கு முன்னரே, தாங்களாகவே விலகி விட்டதாக யிருக்க வேண்டுமென்று எண்ணியே பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டு வருகின்றனர், இப்படி அறிக்கை விடுபவர்களில் இரண்டொருவர் மதுரை மாநாடு நடைபெறுவதற்கு முன்பும் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

கட்சியை முன்னின்று நடத்திச் செல்பவர்கள் மீது வீண் பழி கூறும் இவர்களுக்கு உண்மையிலேயே இயக்கக் கொள்கையின் மீது பற்றிருக்குமானால், நிர்வாகத்தைத் தாங்களே கைப்பற்ற முயல வேண்டும் அதுதான் ஜனநாயக முறை. அதற்கு போதிய ஆதரவோ சக்தியோ இல்லையெனில், கட்சியிலிருந்து ஒதுங்கி நிற்க வேண்டும். அல்லது இதே கொள்கைக்குத் தங்களால் முடிந்தவரை பணியாற்ற தனி முகாம் அமைத்துக் கொண்டாலும் குறை கூற இயலாது.

ஆனால் விலகிக் கொண்டதாக அறிக்கையை திருப்பித் திருப்பி பத்திரிகைகளில் வெளியிட்டு பரம திருப்தி கொள்ளும் இவர்கள் செய்தது என்ன?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் — திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையிலேயே வேறுபாடு கொண்டுள்ளதும் வடநாட்டுத் தலைமையின் பிடிப்பியங்குவதுமான காங்கிரஸ் முகாமில் தஞ்சமடைந் திருக்கின்றனராம்!

இப்போக்கிலிருந்து தெரிய வருவதென்ன? தி. மு. கழகத்தை நடத்திச் செல்பவர்கள் மீது இவர்கள் குறை கூறுவதென்பது இவர்களுக்குண்டாயிருக்கும் கொள்கைக் குழப்பத்தை, கொள்கையிலிருந்து வழுக்கி விழுவதை மறைத்துக் கொள்ளச் செய்யும் ஒரு காரியமேயல்லாது வேறென்னவாக யிருக்க முடியும்?

ஆகவே நம் இயக்கக் கொள்கைக்கே ஊறு செய்யும் வகையில் விலகிச் செல்லும் இவர்களின் ராஜிநாமா குறித்து தி. மு. கழகத்தினர் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. எனவே விலகிச் சென்றவர்கள் நம்முடன் இருந்தபோது நற்பணியாற்றி யிருந்தால், அதற்கு நன்றி காட்டுவோம். விலகிச் சென்றபின் அவர்கள் வீசும் வசை புராணங்களை நாம் மறப்போம்.

தி. மு. கழகத்தைப் பொறுத்த வரை உண்மையான உழைப்புக்கும், கொள்கை உறுதிக்கும்தான் மதிப்பளித்து வருகிறதே யல்லாது தனிப்பட்டவர்களின் ஜபர்தஸ்து, மிரட்டல், அல்லது பொருளாதார பெருமைக்காக அல்ல.

திராவிட முன்னேற்றக் கழகம்—அதில் ஈடுபட்டுள்ள தோழர்களின் கூட்டு முயற்சியால் இயங்கி வளர்ந்து வருகிறதேயன்றி, தனிப்பட்ட ஒருவரின்—சிலரின் கிருபாகடாட்சத்தால் அல்ல.

எனவே மதுரை நகர் சம்பவத்தால் மதுரை நகர் தி. மு. கழகத்தின் வளர்ச்சியோ மற்ற நடவடிக்கைகளோ ஒரு சிறிதும் பாதிக்கப்படவில்லை யென்பது மட்டுமல்லாமல் முன்னைவிட சிறப்புடன் பணியாற்றியும் வருகிறது.

தாராபுரம் தி. மு. க.

தாராபுரம் வட்டக் குழுவின் சார்பாக 20—3—55-ல் கன்னிவாடியில் ஐந்தாண்டு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரியவர் கே. எஸ். எஸ். அவர்கள் தலைமைதாங்க தோழர்கள் முகதுச்சாமி, எஸ். வி. சக்கரை, பொன்னப்பன் மற்றும் பல தோழர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துப் பேசினர்.

கோமயமும் அண்ணாமலைப் பிள்ளையும்!

தோழர் என். அண்ணாமலைப்பிள்ளை
திருவண்ணாமலை

சென்னை சட்ட (மேல்) சபை உறுப்பினரே நலம் வேண்டுகிறேன். தாங்கள் 19—3—55-ம் நாளன்று மேல்சபைக் கூட்டத்தில் கேள்விகள் கேட்டு வெளுத்துக் கட்டிவிட்டதை தினசரிகள் வாயிலாக அறிந்தேன். மற்றவர்களெல்லாம் இருக்கிறார்களே எதற்குப் பிரயோசனம்?

சென்னை நகருக்குள் கால் நடைப் பிராணிகளை அனுமதிக்கும் கட்டுப்பாடு தீர்மானமொன்றை டாக்டர் எ. சீனிவாசன் கொண்டுவந்ததை எதிர்த்துத் தாங்கள் பேசுகையில் 'இந்து சமூகத்தினர் பசுக்களை கடவுளாகப் பூஜிக்கிறார்கள்; ஒவ்வொரு குடும்பமும் பஞ்சகவ்யம் (மாட்டு மூத்திரம்) அருந்த வேண்டும். அத்தகைய புனிதமான பிராணிகளை சென்னை நகர எல்லையிலிருந்து அகற்றக் கூடாது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது மட்டுமா? வசிஷ்டர் கூட சொல்லியிருக்கிறார் சாணத்தையும் கோமயத்தையும் சாப்பிடும்படி, என்றும் காரசாரமாகப் பேசி யிருக்கிறீர்கள்.

அதற்கு டாக்டர் எ. சீனிவாசன் பதில் கூறுகையில், வசிஷ்டர் என்ன—அவர் பாட்டனே சொன்னால் கூட நமது அறிவுக்கு கெட்டதென்று படுவதைச் செய்யக் கூடாது. இதுபோன்ற நம்பிக்கைகளால்தான் நம் நாடே பாழாகிவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணாமலையாரே, பாருங்கள். இந்த டாக்டர் சீனிவாசனுக்கு என்ன தெரியும்? வசிஷ்டரையே கண்டிக்கிறார் — சுத்த பைத்தியமோ அல்லது பக்கா நாத்திகரோ தெரியவில்லை. அவர் எப்படியோ போகட்டும் நமக்குக் கவலையில்லை.

ஆனால் உங்கள் ஆராய்ச்சியும் பேச்சும், இருக்கிறதே அடா அடா! நம் நாட்டுக்கு மிகவும் உடனடித் தேவையென்றே கூறலாம்! மாட்டு மூத்திர—சாணியை ஒவ்வொரு குடும்பமும் சாப்பிட வேண்டுமென்று அபார ஆராய்ச்சியுடன் அதுவும் வசிஷ்டரையே துணைக்கழைத்துச் சொன்ன உமது அறிவாற்றலுக்கு "பஞ்சகவ்ய அண்ணாமலைப்பிள்ளை" என்ற பட்டத்துடன் அழைத்தாலும் தகும்.

இல்லையெனில் பஞ்சகவ்ய (மாட்டு மூத்திரம் சாணி) சப்ளை இலாக்கா ஒன்றைத் தனியாக ஏற்படுத்தி அதற்கு உங்களையே அமைச்சராகவும் நியமனம் செய்துவிட்டால் வசிஷ்டர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்று நாட்டிலேயுள்ள வறுமையைக்கூட ஒழித்துவிடலாம் அல்லவா?

மனிதருள் மாணிக்கம் என்கிறார்களே—அது நீங்கள்தான்! சந்தேகமேயில்லை!

—கூத்தரசன்

தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி
புது டெல்லி

இந்திய சர்க்காரின் அமைச்சரே, நலம் வேண்டுகிறேன். தங்களின் மந்திரிப் பதவி ராஜிநாமா நாடகங்களை ஒருவாறு முடித்து விட்டீர்கள்! ஆனால் வேறொரு நாடகம் நடத்த முற்பட்டு அதிலும் 'டன்கர்க்' ஆகி விட்டதாகப் பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது!

தங்களின் பெயருக்குப் பின்னால் உள்ள ஜாதிக் குறிப்பான 'சாரி' என்பதை வெட்டி எடுத்துவிடத் தீர்மானித்து விட்டதாகத் தாங்கள் பத்திரிகை நிருபர்களிடம்தெரிவித்ததாக 18-3-55-ம் இதழ்களில் செய்தி வெளிவந்தன. ஆனால் 20-3-55 இதழ்களில் அந்தச் செய்திக்குத் தாங்கள் கூறியுள்ள தத்துவார்த்தத்தையும் படித்தேன். 'நான் தனிப்பட்டு ஒருவரிடம் பேசியிருந்ததை இப்படிப் பத்திரிகைகளிலே வெளியிட்டுவிட்டார்கள், நான் ஜாதிப் பட்டத்தை விடத் தீர்மானிக்கவில்லை' யென்று கூறி யிருக்கிறீர்கள்; பதவியைத் துறக்கும் பிரச்னைதான் நாடகம்போல முடிந்தாலும் ஜாதிப் பட்டத்தை விடும் பிரச்னையுமா திருவிளையாடல் மாடலில் இருக்க வேண்டும்?

தோழர். கிருஷ்ணமாச்சாரியாரே, திங்கள் ஒன்றுக்கு இது போன்ற திடீர் சம்பவங்களை உண்டாக்கி வாருங்கள்; இறுதியாக 'கிருஷ்ணமாச்சாரி படலம்' என்பதாக ஒன்றினை உருவாக்கி விடலாம். ஆகவே உங்களின் அடுத்த 'ஸ்டண்ட்' என்னவென்று எதிர்பார்க்கலாமா?

—கூத்தரசன்

'தீச்சுடர்' அறிக்கை

தீச்சுடர் பெரிய அளவில் மே திங்கள் முதற்கொண்டு சென்னையிலிருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்துக் கொண்டிருக்கின்றது. அதுவரையில் பொறுத்துக் கொள்ள மனமில்லாத ஏஜெண்டுகள் சந்தாதாரர்கள் கணக்கைத் தீர்த்துக் கொள்ளலாம். அவரவர்கள் விருப்பத்தை அன்புகூர்ந்து உடனே திருச்சி அலுவலகத்திற்கு எழுதவும்.

—நிர்வாகி 'தீச்சுடர்' திருச்சி

உடனே தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'திராவிடன்' விற்பனை செய்ய—முன்பணம் கட்டக்கூடிய நாணயமான ஏஜண்டுகள் உடனே தேவை.

குடந்தை திருவைகுண்டம்
சத்தியமங்கலம் கோடைக்கானல்
சாத்தான்குளம்

திராவிடன்

சென்னை : 25—3—55 : வெள்ளி

பரந்த கண்ணோட்டக் காரர்களின் பித்தலாட்டம்!

●

நம்நாட்டிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியின் போக்கினை நாம் பலமுறை எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கிறோம். எந்த பொதுவுடமைத் தத்துவம் நடைமுறையில் வர வேண்டுமோ அதே கொள்கையைச் சீரழிப்பதில் நம்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு அபாரத் திறமையுண்டு! இன்னும் சொல்லப் போனால் கம்யூனிஸ கொள்கை வளரவிடாமல் தடுக்க கம்யூனிஸ்டு கட்சி என்ற பெயரால் ஐந்தாம்படை வேலையைச் செய்கின்றனரோ என ஐயுற வேண்டி யிருக்கிறது. இவ்வாறு நாம் கூறுவதை. இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் கடந்த கால சம்பவங்களையெல்லாம் நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தால் நாம் கூறுவது முற்றிலும் உண்மை என அரசியல் யூகம் படைத்த அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர்.

தொழிற் சங்கத் துறையில் இருந்து வந்த கட்டுக்கோப்பையும், தன்மானத்தையும் சீர்குலையச் செய்ததைப் போலவே அரசியல் துறையிலும் இந்த கம்யூனிஸ்டுகளின் இன்றைய நடவடிக்கைகள் மலிந்து நிற்கின்றன.

ஆவடி காங்கிரசிலே நிறைவேற்றப்பட்டுள்ள "மாதிரி சோஷலிஸ" தீர்மானத்தினால் தங்களின் கட்சியின் மனப்பான்மையே திருந்திவிட்டது; இனி காங்கிரஸ் சர்க்காருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சட்டத்திற்குட்பட்ட வகையில்தான் அபிப்ராய பேதமோ அல்லது ஒத்துழைப்போ யிருக்குமேயல்லாது வீண் தொல்லையோ மற்ற நடவடிக்கைகளோ தலைகாட்டாது என்று பொருள்படும்படி சென்னை சட்டசபையிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவராகிய தோழர் கல்யாணசுந்தரம்அவர்கள் அமைச்சர் சுப்ரமண்யனிடம் அரசியல் பதிகம் பாடி யிருக்கிறார்!

கம்யூனிஸ்டுகளின் இவ்விதமான மாற்றம் எத்தன்மையது என்பதைப்பற்றி நாம் கூறுவதைவிட கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் கல்யாணசுந்தரம் அவர்களின் இப்பேச்சினையடுத்து நடைபெற்றுள்ள மற்றொரு சம்பவத்தை எடுத்துக்காட்டியே சிந்திக்குமாறு வாசகர்களை கேட்டுக் கொள்கிறோம்.

திரு-கொச்சியில் அடக்கு முறையின் துணைகொண்டு ஆட்சிபீடமேறி ஆர்பாட்டம் செய்த பட்டம் தாணு சர்க்காரைப் பற்றி நாம் அதிக விவரிக்கத் தேவையில்லையென்று கருதுகிறோம். அன்று பட்டம் தாணுவின் ஆட்சி முறையிலுள்ள கொடுமைகளை மட்டுமல்லாது அவரின் தனிப்பட்ட காரியங்களையும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர் கம்யூனிஸ்டுகள்!

பட்டம் தாணுவை ஆட்சி பீடத்திலே அமர்த்திவைத்து அரசியல் பொம்மலாட்டம் நடத்திவந்த காங்கிரஸ் மேலிடம் பட்டம் தாணு சர்க்காருக்குச் சீட்டு கொடுத்துவிட்டு தாங்களே ஆட்சிபீட மேறியுள்ளனர்.

காங்கிரசார் ஆட்சிபீட மேறுவதற்கு முன்பாக அங்குள்ள கம்யூனிஸ்டுகள் பட்டம் தாணுப்பிள்ளை கட்சியினருடன் பேரம் பேசிக்கொண்டு பதவி நாற்காலிகளைத் தாவிப்பிடிக்க துடிதுடித்தனர். இந்த எண்ணமும் செயலும் எவ்வளவு பித்தலாட்டத்தனமானது என்பதைப் பொதுமக்கள் உணரவேண்டும். அடக்குமுறை தர்பார் நடத்தும் பட்டம் தாணு சர்க்கார் ஒழிந்தே போகவேண்டுமென்று ஓயாமல் கண்டனக் குரல் எழுப்பிய கம்யூனிஸ்டுகள் அடுத்த விநாடியே பட்டம்தாணு கோஷ்டியுடன் அரசியல் பேரம் பேசத் துணிந்தார்களென்றால் இதைவிட நேர்மையற்ற செயல் வேறென்ன யிருக்க முடியும்?

கம்யூனிஸ்டுகளின் இந்த அரசியல் பேரம் மண்ணைக் கவ்விய பிறகாவது அவர்களுக்கு தெளிவு ஏற்பட்டதா? அரசியல் நாணயத்திலே நம்பிக்கை கொண்டனரா யெனின் அதுதான் இல்லை.

சென்னையிலே காங்கிரஸ் சர்க்காரிடம் பேரம்பேசும் கம்யூனிஸ்டுகட்சி திரு-கொச்சி 18—3—55 அன்றும் அதன்பின் ஒருநாளும் சட்டசபைக் கூட்டத்திலே பட்டம் தாணு கோஷ்டியுடன் கூடிக்கொண்டு சட்டசபையை விட்டு வெளியேறும் நாடகத்தில் வேடம் தரித்திருக்கிறது!

பட்டம் தாணு கோஷ்டியினருக்கு காங்கிரசாரிடம் மனஎரிச்சல் ஏற்படுவதும் அதற்கேற்ப வெளியேற்றப் படலத்தில் ஈடுபடுவதும் நியாயமெனப்படலாம். அந்தப் பட்டம் தாணு கோஷ்டியுடன் கம்யூனிஸ்டுகள் கைகோர்த்துக்கொண்டு கும்மாளமடிப்பதில் அரசியல் தன்மானம் இருக்க முடியுமா யென்று கேட்கிறோம்.

சென்னை சட்டசபையில், ஆவடி தீர்மானத்தைக் கண்டு மனமாற்ற மடைந்துவிட்டதாகக் கூறுகின்றனர் கம்யூனிஸ்டுகள் அதுமட்டுமல்லாமல் தங்கள் கட்சியைச் சார்ந்தவர்களை (சிறையிலிருப்பவர்களை) விடுதலை செய்துவிட வேண்டுமென்றும் கெஞ்சுகின்றனர்!

திரு. கொச்சி கம்யூனிஸ்டுகளோ பட்டம் தாணு கோஷ்டியுடன் கூடிக்குலாவுகின்றனர்! அனைத்திந்திய அரசியலில் எடுத்துக் கொண்டால் வடநாட்டு முதலாளித்துவத்துக்கு மறைமுகமான பாதுகாப்பளிக்கின்றனர்!

இவ்வித பித்தலாட்டத்தில் முனைந்துள்ளவர்களிடம் சிக்கியுள்ள பொதுவுடமைத் தத்துவம் வெற்றிபெற முடியுமா யென்பதைக் கம்யூனிஸ்ட் கட்சியிலே ஈடுபட்டுள்ள தோழர்கள் உள்பட அனைவரும் அரசியல் யூகத்துடன் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் இந்த So-Called கம்யூனிஸ்டுகளின் அரசியல் நடவடிக்கைகள் நம்மாநிலத்தின் நல்வாழ்வுக்கு முட்டுக்கட்டையாகவே யிருந்து வருகிறதென்று கூறின் மிகையாகாது.

தென்னாட்டுக் கம்யூனிஸ்ட் தலைமையின் போக்கு எதிர்காலத்தில் "வரவர மாமி" கதைக்கு இலக்காயினும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே "ஏகஇந்தியா" என்ற போர்வையில் இடத்திற்கு ஒரு அரசியல் திருவிளையாடல் புரிந்துவரும் கம்யூனிஸ்டு தலைமையின் முகமூடி விரைவில் கிழித்தெறியப்படும் என்பதுமட்டும் உறுதி.

●

தூத்துக்குடி நகர தி. மு. கழக கிளைத் தேர்தல்

●

தூத்துக்குடி நகர தி. மு. க கிளைத் தேர்தல் 27—3—55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-மணி அளவில் தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப்பில் நடைபெறும். சென்னைத் தோழர் கே. எம். கண்ணபிரான் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார். தூத்துக்குடி நகர எல்லைக்குள் 28—2—55-ம் நாளுக்கு முன் உறுப்பினரான தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் கூடி தேர்தலைச் சிறப்பாக நடத்துவார்களாக.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்

கோவை மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

★

26—3—55 மாலை 5 மணி அளவில் (ஈரோடு நேதாஜி வீதி, 342-ம் எண்ணுள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் கடைவீதியிலுள்ள பாம்பே ஹவுஸ் ஜவுளிக் கடைக்கு மேல் மாடியில்) கோவை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பேரூர் பொதுக் குழு முடிவுகள் மாநில மாநாட்டு நிதி இவைகள் குறித்து ஆலோசிக்கப்படும். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகின்றேன். என கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கேட்டுக்கொள்கிறார்.

கைத்தறி வார விழா

இத்திங்கள் 20-ம் நாள் முதற்கொண்டு 26-ம் நாள் வரை நாடெங்கும் கைத்தறி வார விழாவைக் கொண்டாடி கைத்தறித் தொழிலுக்கு ஆதரவு தேட முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை மனமார வரவேற்கிறோம்.

கைத்தறித் தொழில் குறித்தும், அத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைப் பாட்டாளி மக்கள் குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கொள்கை மற்ற செயல்முறைகள் ஆகியவைகளை நாட்டினர் அறிந்ததேயாகும். எனவே இதனை விவரிப்பது தற்புகழ்ச்சி யாகுமென்று அஞ்சி விடுகிறோம்.

நிற்க, இவ்வித விழாக்களின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு ஓரளவு உதவியும் உற்சாகமும் ஏற்படுமேயல்லாது நிரந்தரமான வாழ்வு அமைய முடியாது என்று நாம் பலமுறை சுட்டிக் காட்டி யிருக்கிறோம். ஆனால் இந்த நிரந்தர வாழ்வுக்கான வழிவகைகளை அமுலாக்குவதற்குத் தடையாயிருப்பது எது!

அதனைத்தான் நாம் மீண்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். "ஆலைக்கென்றும், கைத்தறிக்கென்றும் தனி ரக உற்பத்தியை ஒதுக்க வேண்டும் என ஏற்கனவே சென்னை சர்க்கார் செய்த சிபாரிசுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர்" இதனை மிக மனவேதனையோடு 20-3-55-ல் சென்னை கைத்தறி வார விழாவைத் துவக்கிவைத்த அமைச்சர் சுப்ரமண்யனாரே கூறியிருக்கிறாரென்றால் கைத்தறி நெசவுத் தொழிலாளர் பிரச்னையில் டெல்லி ஆட்சியினருக்கு இருந்துவரும் பொறுப்பு எவ்வளவு என்பதை நாம் விவரிக்கவும் வேண்டுமோ!

எனவே நம் மாநில அரசாங்கம், இவ்விதத் திட்டங்களைச் செயல் முறைகளைக் கொண்டுவருவதற்கான முழு உரிமை பெற்றாலன்றி நெசவுத் தொழிலாளர் பிரச்னை மட்டுமல்லாது பொதுவாக நம் மாநிலத்தின் தொழில் துறை வளர்ச்சியில் வெற்றி காண முடியாது என்பதுடன் அவ்வித உரிமையைப் பெற நெசவுத் தொழிலாளர்களும் பணியாற்ற வேண்டுவது இன்றியமையாததாகும் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறோம்.

எனினும் இந்திய அரசினரின் ஆதிக்கப் பிடிப்பு தளரும் வரையில் பொதுமக்கள் அனைவரும் கைத்தறி ஆடையையே அணிவதென்ற உறுதிகொண்டு அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் துயரை ஓரளவாவது துடைத்து வரவேண்டுவது முக்கிய கடமையாகுமாதலால் அத்தகு கடமையை நினைவூட்டுவதற்கு கைத்தறி வார விழாக்களைப் போன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் பயன்பட வேண்டுமென்பதே நமது மனப்பூர்வமான எண்ணமாகும்.

முத்தமிழ், செத்துப்போன கொள்கைகளுக்குச் சாமரம் வீசும் பயனற்ற காரியத்துக்கு பலியிடப்பட்டு வந்த கொடுமையைக் களைவதற்கு, ஒரு அறிவுப்படை தமிழகத்திலே தயாராகி விட்டது. அந்த அறிவுப்படையிலே தோழர் வில்லாளன், முன்வரிசையிலே உள்ளவர்களில் முக்கியமானவர், இளைஞர்... தமிழார்வம் கொந்தளிக்கும் உள்ளம் படைத்தவர். கற்பனைத் திறமிக்க கதைகளை சித்திரத் தமிழிலே தீட்டித் தருபவர். தென்றலாகவன்றோ இருக்கிறது இப்பகுதி இதோ தேனொழுகிறது. அப்பப்பா! புயல் வேகம்—என்று எவரும் வியந்து கூறும் போக்கிலே, அவரது எழுத்தோவியங்களிலே ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையிலே சிறந்து விளங்குகிறது......வில்லாளன் வளர்ந்துவரும் புதுமை இலக்கியத்திற்குக் கிடைத்துள்ள, அரும்பணியாளர்.

அறிஞர் அண்ணதுரை

7. தில்லை. வில்லாளன்

●

இலக்கியத்தில் கதைப்பகுதி என்பது பல எழுத்து மன்னர்களை தோல்வியில் அமிழ்த்திய அதிசயமான துறை. கருத்துகளை கோர்வையாக அடுக்குவதினால் எவரும் கட்டுரை படைத்து விடலாம். கதை என்பது வாழ்வின்—உண்மையான எதிரொலி—அதிலே கருத்து மட்டுமல்ல—கலையின் எழில் மிளிர வேண்டும். உண்மை வாழ்வின் உயிரோட்டம் எழுத்துகளிலே கொப்பளித்து காட்சியாகும் சோபிதம் கால வெள்ளத்தால் வரண்டு விடாது... எண்ண, எண்ண இனிக்கின்ற தன்மையில் பரம்பரை தோறும் வனப்பை வழங்கும் உருவாக்கங்கள் உண்மையிலே வாழ்த்துதற்குரியது!

இலக்கியம் என்பது மனித உணர்ச்சிகளின் மிகப்பெரிய கனவுலகம்—சாமான்ய எழுத்துகளால் கற்றறிந்தவன் எத்தகைய சாம்ராஜ்யத்தை உருவாக்கி விடுகிறான்...

கட்டுரையிலே புயலையும் தென்றலையும் காட்டுகின்ற கெட்டிக்காரர்களின் சிலகதைகளில் உணர்ச்சிகளின் மாயானம் காட்சியாகுமே தவிர வாழ்வின் ஜீவப்பிரளயம் இருக்காது. புகழ் பெற்ற கதை இலக்கியம் எதுவா யிருந்தாலும் அதை எழுதியவனின் உணர்ச்சிப் போரின் விளைவு அது! பெருமை மிக்க அறிஞனைவிட சாதாரண கலைமனம் கொண்டவன் சமுதாயத்தை விரைவிலேயே புரிந்து கொள்கிறான்...ஆயிரமாயிரம் எண்ணங்கள் அவனது நெஞ்சிலே அலைபுரள்கின்றன. சின்னஞ்சிறு நிகழ்ச்சி—உணர்ச்சி நெகிழ்வு—அவனை நிகரற்ற கதாசிரியனாக்கி விடுகிறது...

உலக இலக்கியங்களின் பெரும் வரலாறுகளில் இந்த உண்மை தேங்கிக்கிடக்கிறது.

கதைத்துறைப் பற்றி இத்தனை வியாக்கியானம்' தேவையில்லைதான்...ஏனெனில் இன்னாளில் சிலர் கதை என்பது தோட்டத்து விளைச்சல் என்ற கருத்துடையோர்–கோணிப்போன எண்ணங்களுக்கு விரசமான நிகழ்ச்சிகளை இழைத்துவிட்டு 'இலக்கியம்' செய்கிறார்கள். போலி முறையிலெ வெளிச்சம் போடுவோரின் சந்ததி புழுக்கூட்டமாகப் பெருத்து விட வேதனையான சூழ்நிலையில் வில்லாளன் போன்ற கதையுலக மேதைகளை தேவையான தன்மையில் தமிழகம் புரிந்து கொள்ளாததில் வியப்பில்லை.

வில்லாளன் இலக்கியத்திலே பண்பட்ட எண்ண வளம் படைத்தவர். எழுத்துகளிலே புயலை நிரப்பி வேக நிறைவோடு கதை படைக்கும் பரம்பரையினரில் அவர் பங்கு மிகமிகப் பெரிது!

தமிழில் எவரையும் 'மாதிரியாக'க் கொள்ளாமல் புதிய நினைப்புகள் கமழ அவரது அழகிய ஏடுகள் அரங்கமேறின, ஆம், புதிய இசையையே வில்லாளன் உருவாக்கினார். பிறர் போல அவர் 'வடிகட்டின' பின்பாட்டுக்காரரல்ல, எந்த நிகழ்ச்சியையும் மனதிலே தேக்கி எழில் மெருகிட்டு தமக்கென்ற தனித்த பாணியில் கதையாக்கும் அந்த சாதனை இன்னாளில் எழுத்தார்வமிக்கோர் காணும் இலட்சியக் கனவு...!

வில்லாளன் இல்லாதிருந்தால் தமிழின் மேன்மையை—அதன் சோபிதமான சொல்லடுக்குகளை—அழகிய உவமைச் சிறப்புகளை பெருங் கதைத்துறை பெற்றிருக்குமா என்பதற்கு 'புதிய ஆராய்ச்சி' தேவையில்லை!

தமிழகத்திற்கு புதிய எழுத்தாளர் பரம்பரையை தோற்றுவித்த அறிவியக்கம் பெருமை கொள்ள வில்லாளன் ஒருவரே போதும். அந்த அளவு தமது அழகு நடையால் ஆற்றொழுக்கென பெருகிவரும் உவமை நயங்களால் நிறைந்த புகழை வில்லாளன் குவித்துக் கொண்டார்......

'முதல் விசாரணை'—அந்த புதிய சிந்தனையாளரின் முதலாவது கட்டுரை காவியம் எல்லா எழுத்தாளர்களுக்குமே இயல்பான குறைகள் நிறைந்திருந்தாலும் எழுதப்பட்ட பாணிக்காக எல்லோருமே அதனை விரும்பிப் படித்தார்கள். வில்லாளனின் மலர்ந்த எதிர் காலத்திற்கு 'முதல் விசாரணை' பூச்சரம் தொடுத்தது!

அடுத்து எழுதிய 'சாவோலை'யில் அரசியல் இலட்சியங்களை கலை எழில் ததும்ப வில்லாளன் சித்தரித்திருந்தார். கவர்ச்சியான புதிய தமிழுக்கு புயலொத்த தனித்த பாணி மெருகளித்தது. முதல் வெளியீட்டில் நிறைந்திருந்த அடுக்கு மொழிகளும் அர்த்தமற்ற அலங்காரங்களும் மறைந்து புதிய தேக்கமில்லாத தமிழ் வில்லாளனிடம் பிறந்திருந்தது. அரசியலை புரிந்து கொண்டு இலக்கியம் படைப்போரில் பெரும் பகுதியினருக்கு கட்டுரை எழுதுவது மிகமிக எளிதான செயல்...ஏனெனில் இலட்சியங்களை எண்ணி, எண்ணி, பண்பட்டுப் போன

நெஞ்சத்திற்கு சொற்களை தேட வேண்டியதில்லை கதை என்பது இருப்பதை விவாதிப்பதல்ல—அது புதிய உருவாக்கம்—வாழ்க்கையை உணர்ச்சியோடு சித்தரிக்க வளமான சிந்தனை வேண்டும். 'அரசியல் பாடம்' அதற்கு பயன்படாத ஒன்று.

சிறுகதைத் துறையில் வில்லாளன் புதிய எண்ணங்களோடு வந்தார். பிறர்போல அவர் அந்த நாட்களில் 'எழுத்துப் பயிற்சிகளை' வண்ணமுகப்பிட்டு சந்தையிலே குவிக்கவில்லை. 'கழுதை ஊர்வலம்' 'நீல நிலவு' போன்ற சிறுகதைகளில் வளர்ச்சி பெற்ற எழுத்தாளனின் 'சாயல்' தென்படவில்லை. எனினும் அத்தகு கதைகள் புதிய உதயத்தின் ஒளிக்கற்றைகளாயிருந்தன.

'கோயில் பெருச்சாளிகள்' வில்லாளனின் அழகிய நெடுங்கதை. கதையமைப்பும், நிகழ்ச்சிகள் படிப்போரின் மனதிலே பதிய அவர் வகுத்துக் கொண்ட நடைச்சிறப்பும் இலக்கியத்திலே எவரும் தொட்டறியாத புதிய பாணியை நிறைவு செய்தன. இருண்ட பிரகாரங்களிலே நிகழும் ஆயிரமாயிரம் விகார விளையாடல்களை' வில்லாளன் அத்தனை, அழகாக சித்தரித்திருந்தார். 'கோயில் பெருச்சாளிகள்' வளர்கின்ற செந்தமிழுக்கு வாய்த்த அரும் பேருயிற்று' நல்ல மொழிச்சுவையும், இனிய எளிய சொற்களில் உணர்ச்சிகளை பதிக்கும் தன்மையும் வில்லாளனை புதிய கதாசிரியராக தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தின.

தென்றல் தவழ்தல் போன்ற மொழி—அடைப்புக் குறிகளினுள்ளே பொருட்செறிவு மிகுந்த சொற்களை படைத்துக் காட்டும் ஆற்றல்—வனப்பும் வலிவும் மிகுந்த நிகழ்ச்சிப் பின்னல் ஆகியவை வில்லாளனின் போற்றுதற்குரிய சிறப்பியல்புகள்!

பெருங்கதைப் புலவர் என்ற தன்மையில் இன்று அவர் எழுத்தார்வமிக்க பலருக்கு நல்லாசிரியர்—இலக்கியம் வேறு—பிரசாரம் வேறு என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு சந்தர்ப்பமில்லாமல் நல்ல உயிரோவியங்களை எழுதும் 'அதிசய' எழுத்தாளர் வில்லாளன்! இதுவே பெருங் கதையின் கருப்பொருள் என்று எவரும் இன்னாள்வரை எல்லை வகுத்ததில்லை, உலக இலக்கியங்களில் புகழ்பெற்ற படைப்புகள் ஒவ்வொன்றும் வேற்றுமையான அமைப்பை கொண்டுள்ளன. நவீனம் என்பது சிறுகதையை 'நீட்டி வளைக்கும்' உருவமல்ல நல்ல கதையை எழுதுபவன் புதிய வாழ்வையே சிருஷ்டித்து விடுகிறான். நவீனங்களின் சிறப்பு அதன் அமைப்பிலேயே தேங்கி நிற்கிறது. எழுத்துத்துறையில் எல்லையற்ற புகழை விரித்துக் கொண்டோரின் பல கதைகள் அமைப்பின் பழுதினால் அலங்கோலமாயிருக்கின்றன.

வில்லாளன் இலக்கியத்தை பண்பட்ட தன்மையில் கற்றறிந்தவர். அரைகுறையாக எதையேனும் படித்துவிட்டு 'திண்ணை வேதாந்தம்' பேசும் திராணியற்ற 'பொழுது போக்கு' சிந்தனையாளரல்ல. இலட்சியத்தை எழில்பட இலக்கியத்தில் இழைக்கும் புகழ் வாய்ந்த பரம்பரையில் வில்லாளன் முதல்வர். அவருக்கு முன் எத்தகையோரும் இந்த அற்புதங்களை சாதித்ததில்லை.

அகத்துறை நிகழ்ச்சிகளுக்கு அழகிய மெருகிட்டு மாராட்டிய மண்டலத்து சாணக்கியர் 'கருகிய மொட்டு' என்ற தலைப்பில் பெருங்கதை ஒன்றை எழுதினார். புதிய பாணியும், கவர்ச்சியான நடையும் அதற்கு பெரும் புகழைத் தேடித் தந்தன.

'கருகிய மொட்டின்' அமைப்பை மட்டும் தேக்கி வில்லாளன் 'அத்திப் பூக்களை' உருவாக்கினார். இது மறுபதிப்பல்ல—தனமை அதுவே தவிர தமிழகத்திற்கு வில்லாளனின் நவீனம் அதுவரையில்லாத புதுஉயிரைப் பெய்தது!

அத்திப் பூக்களில் வில்லாளனின் அழகு நடை புது மலர்ச்சி பெற்றிருந்தது. அகத்துறை வாழ்வின் கனவுச் சிதைவுகளை—ஆசாபாசங்களை இத்தனை எழில் மெருகோடு எழுதியோர் வேறு எவருமில்லை. புதிய உவமைகள் வில்லாளனின் மற்றொரு சிறப்பு வைரக் குவியலில் ரோஜாக்களை உதிர்த்தாற் போல அந்த உவமைகள் இலக்கிய அழகிற்கு எல்லையிட்டு காட்டின. இதுவரையில்லாத அழகு தேங்கிய தலைப்புகளை சுவையான கதைப்பின்னலை கலையின் மேன்மையை இலக்கியத்திலே இழைத்த கவர்ச்சியை வில்லாளனின் எழுத்துகள் தமிழுக்கு படையலாக்கின.

கதை அமைப்பில் அவர் பிறரின் பாதச்சுவடுகளில் நடப்பவரல்ல—தனியான புகழ் பாணியை வில்லாளன் தனக்கென வகுத்துக் கொண்டார். இந்தத் துறையில் அவர் முதல்வர், இதனாலேயே வளரும் புகழ் அவரை வாழ்த்துகிறது.

'தங்கத் தாமரை' 'கண்ணீர் கோட்டை' 'யாத்திரை' 'அடிவானம்' 'பாவம்' போன்றவை புதிய பாணியிலே எழுதப்பட்ட இலக்கியச் செல்வங்கள். கொள்கை பிரசாரத்தை, கலையின் மேன்மை கொள்ளை போகாமல் இலக்கியத்திலே புகுத்தலாம் என்பதை முதலில் சாதித்துக் காட்டியவர் வில்லா

தெய்வ வழிபாடும் இராமலிங்கரும்!

'இன்பன்'

ஞாயிறிலிருந்து பிரிந்த ஒருபாகம் தான் நாம் வசிக்கும் இவ்வுலகமாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். குளிர்ச்சி அடைய அடைய புல், பூண்டுகள் முளைத்தன. பின்பு புழு, பூச்சிகள், பறவைகள், மிருகங்கள் தோன்றலாயின. குரங்கிலிருந்துதான் மனிதன் உண்டாயிருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சி. மனிதன் இயற்கைப் பொருள்களை பச்சையாக உண்டான். பின்னர் வேகவைத்து உண்ணக் கற்றுக் கொண்டான். அறிவு வளர வளர பகுத்தறிவும் பண்பும் பெற்றான். இயற்கையில் மழை பெய்தல், பூக்கள் பூத்தல் சூரியன் தோன்றுதல், சந்திரனின் பால் நிலவு போன்ற வியக்கத்தக்க காட்சிகளைக் கண்டதும் ஏதோ ஒருசக்தியிருக்க வேண்டுமென்று எண்ணினான். அதன் பலன்தான் மனிதன் கடவுளை உண்டாக்கினான். இதனால்தான் 'கடவுள் என்பது உறைந்துபோன மனிதக் கற்பனையின் புகை' என்று காண்டேகரும், 'மனிதனால் ஒரு சிறு பூச்சியைக்கூட உண்டாக்க முடியாது; ஆனால் கோடிக் கணக்கான தெய்வங்களை உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறான்' என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மனிதன் உண்டாக்கிய கற்பனைக் கதைகளின் கதாபாத்திரங்கள்தான் தெய்வங்கள். சமயத்தைப் பரப்ப கதைகள் மிகவும் பயன்பட்டன. கொள்ளையினக் கூட்டத்தார்கள்தான் சமயத்தை உண்டாக்கினார்களாம். அக்கூட்டத்தார் கூறும் கலைகளும் பிறவும் கள்ளம் நிறைந்ததாம். அத்தகைய கள்ளமுள்ள மக்களின் கற்பனைக் கதாபாத்திரங்களைக் கலையாக ஆக்கினர். (அதாவது சித்திரம், ஓவியம் முதலிய வடிவிலே உண்டாக்கினர்) அந்தக் கலையுரைத்த கற்பனைதான் பின்பு நிலையாகி விட்டது. அவை தொலைய வேண்டும் என்று வள்ளலார் இராமலிங்க அடிகள் கூறுகின்றார்.

'கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டிய
[பல்சமயக் கூட்டமுமக் கூட்டத்தே
கூவுகின்ற கலையும், கள்ளமுறு மக்
[கலைகள் காட்டிய
பல்கதியுங் காட்சிகளுங் காட்சிதருகடவு
[ளரு மெல்லாம் பிள்ளைவிளையாட்டு'
'கலையுரைத்த கற்பனையே நிலையெனக்
[கொண்டாடும் கண்மூடிவழக்கமெலாம்
மண்மூடி போக'

'கள்ளமுறு மக்கள்' என்கிறார் வள்ளலார். அத்தகைய கள்ளம் நிறைந்த உள்ளம் கொண்ட மக்கள் யார்? கொள்ளையினக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் யார்? 'ஒதி யெந்த விதத்தாலும் வேதியனும் தேர்ந்தரியா ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்' என்கிறார். வேதியரை அடிகளாரும் வெறுக்கிறார். எதற்காகப் பாங்காக அவர்கள் நடிக்கிறார்கள்? பொய்யானவற்றை மெய்யாக விளக்குகிறார்களாம். 'பொய் விளக்கப் புகுகின்றார் போது அழிக்கின்றார்' என்கிறார்.

பொய்யாகக் கூறியதும் சூதாகச் சொன்னவையுமாகிய சாதி, மதம், சமயம் முதலியனவற்றை நம்பி சண்டை செய்து வீணாக அலைகிறீர்கள் அதனால் பயன் இல்லை! கொள்ளைவினைக் கூட்டத்தாரால் அல்லவா அவைகள் தோன்றியவை என்கிறார் இராமலிங்கஸ்வாமிகள். 'சாதியும் மதமும் சமயமும்பொய்' என்கிறார். மேலும்,

சாதியிலே மதங்களிலே சமயநெறி
[களிலே
சாத்திரச் சந்தடியிலே கோத்திரச்
[சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற
[உலகீர்
அலைந்தலைந்து வீணே நீரழிதல் வழக
[லவே

அழிதல் அழகல்ல என்கிறார். அருமை ஆஸ்திகர்களுக்கு அறிவுரை அளிக்கிறார் வள்ளலார். அப்படி அலைகிறவர்கள் 'மண்ணாகி நாறுகிறார்களாம்' இதை விட என்ன வார்த்தையை உபயோகிப்பது!

சமயத்தில் அத்தனை தீயவைகள் உள்ளன என்பதுதானே. இதற்குப் பொருள்! வருணாசிரமத்தை இன்று எதிர்ப்பதற்கு ஆத்திரப்படுகின்றார்களே இராமலிங்கர் வெறுக்கிறாரே அதற்கு என்ன பதில் சொல்வர்! 'நால் வருணாச்சிரமமாசார முதலா நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டு' என்கிறார். அதுவும் குழந்தை விளையாட்டாம். எவ்வளவு மட்டமாகக் கருதுகிறார் பாருங்கள்.

சாத்திரங்கள் தடுமாற்ற வாழ்க்கைக்குத்தான் வழி காட்டுகின்றனவாம். தெளிவான வாழ்க்கையைக் காட்டவில்லையாம். மேலும் சாத்திரங்கள் உண்மையை அடிப்படையாகக் கொண்டதல்லவாம். உண்மையையே கூறவில்லை என்கிறார். மேலும் அச்சாத்திரங்கள் சூதாகச் சொன்னவைகளாம். இவைகள் பயனற்றவை என்கிறார். யார் திராவிடர் இயக்கத்தார் சொல்லவில்லை பழுத்த பக்திமானான வள்ளலார் பகர்கின்றார்.

'சாத்திரங்களெல்லாந் தடுமாற்றஞ்
[சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே'
என்றும்,
'வேதாகமங்களென்று வீண்வாதமாடு
[கின்றீர்
வேதாகமத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்னவலாலுண்மை வெளிதோன்ற
[வுரைத்த வில
என்ன பயனோ விவை'

நாட்டில் சாதி மதம் சமயம் என்று கூறி மக்களை மடமையில் ஆழ்த்தியிருக்கிறார்கள், சாதி மதம் சமயம் இம்மூன்றும் பேய் போல் மக்களை வாட்டி வருகின்றன. அதை ஒழிக்க வேண்டுமென்பது இராமலிங்கர் கருத்து. 'சாதி குலமென்றுஞ் சமய மதமென்று முய, நீதியிலாச்சிரம நீட்டென்று—மோதுகின்ற பேயாட்டம்' என்கிறார். மேலும் சமயத் தெய்வங்களை இழிவாகக் கூறுகிறார். 'சமயத் தெய்வம் பலவுஞ் சிறிய துரும்பு' என்கிறார். தெய்வத்தைத் துரும்பாக மதிக்கிறார், 'சாத்திரக் குப்பை' என்றும் 'சாத்திரச் சேறு' என்று, சாத்திரத்தை இழித்துக் கூறுகிறார். 'சதுமறையாகம சாத்திர மெல்லாஞ் சந்தைப் படிப்பு நஞ்சொந்தப் போவது' மறைஆகமம் சந்தைப் படிப்பாம். அது விஷமாக இருக்கிறதாம்! அதுமட்டுமா! 'வேத நெறிபுகல் சகலமும் தேவலம்' என்கிறார்.

'வேதநெறி ஆகமத்தின் பவுராணங்கள் விளம்புநெறி, இதிகாசம் முதலாய இந்திரசாலங்கள்' செப்பிடுவித்தையாகக் கருதுவதைப் பாருங்கள், என்ன மோசடி என்பதை எண்ணுங்கள்! அதுவும் பக்தி நிறைந்தவர் கூறுகிறார் இப்படி! அப்படியெல்லாம் கூறிய அவரையே இன்று வணங்குகிறார்களே!

தெய்வ நம்பிக்கைக் கொண்டு பணத்தைப் பாழ்படுத்தும் பக்தர்களுக்கு கூறுகிறார். தெய்வ பெருமை பேசி பாழாகாதீர்களென்று. பொய்யான கலையால் தோன்றிய கற்பனைக் கடவுளைப் புகழ்கின்றவர்கள், பொய்யான சமயத்தைப் போற்றுகின்றவர்கள், மெய்யானவற்றை அறியாதவர்கள் என்கிறார், அவர்கள் வீணான நம்பிக்கைக் கொண்டு பாழ்படுகிறார்களாம்!

உலகில் உள்ள பேதை மக்களே! தவம் என்பது ஏது! விரதம் என்பது ஏது! வேதம் என்று கூறுபவைகள் பித்தம் தலைக்கேறியவர்கள் கத்தும் புரட்டுப் பிதற்றலாகும்! உலகத்திலுள்ள உண்மை ஒரு சிறிதும் அதில் இல்லை. வீணாக அத்தகைய பித்தர்கள் பேச்சைக் கேட்டு வாழ்வைப் பாழாக்கிக்கொள்ளாதீர்கள் என்று பகர்கிறார் வள்ளலார்.

'தெய்வங்கள் பலப்பல சிந்தைசெய்வாரே
சேர்கதிப் பலப்பலச் செப்புகின்றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடுவோரும்
பொய்ச் சமயாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்க மொன்
[றறிகிலார்
மேல்விளைவறிகிலார் வீண்கழிக்கின்றார்'
'பேதையுலகீர் விரதமேது தவமேது
[வீண்பேச்சிவை யெலாம்
வேதனும் பித்தன் வாய்ப் பித்தேறு
[கூத்து நூல் கத்திய பெரும்
புரட்டாகு மல்லாமல், ஒதையுறு
[முலகாயத்ததிலுள வுண்மை
போ லொரு சிறிதுமில்லையில்லை'

விரிவு அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். ஆனால் அருமை ஆஸ்திக அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்-இராமலிங்கர் பாடிய ஒரு பாடலையும் தருகிறேன் அதைப் படித்துப் பண்படுவீர்களாக!

இது நல்ல தருணம்—அறிவுபெற
(அருள் செய்ய)
இது நல்ல தருணம்.
மதித்த சமய மத வழக்கெல்லா
[மாய்ந்தது
வருணாச்சிரம மெனுமயக்கமுஞ்
[சாயந்தது
கொதித்த லோகாசாரக் குறிப்பெல்லா
[மொழிந்தது
கொலையுங்க ளவுமற்றைப் புலையு
மழிந்தது. (இது)
குறித்த வேதாகமக் கூச்சலு மடங்
[கிற்று
கொதித்த மனமுருட்டுக் குரங்கு
[முடங்கிற்று (இது)
—இராமலிங்கஸ்வாமிகள்

ளன்· 'கண்ணீர் கோட்டை' ஒன்றே போதும் இதனை விளக்க. 'பெண்ணுரிமை' பற்றிய ஆயிரமாயிரம் கட்டுரைகளைவிட இந்த நெடுங்கதை மிகுந்த பயன்தரும் வகையில் அமைந்திருந்தது. சமூகத்தின் அடிப்படையில் வில்லாளனின் 'திருஷ்டி' தோட்டதால் உருவான உயிரோவியம் இது. இலட்சிய வெற்றிக்கு இலக்கியத்தை பயன்படுத்தி பெருமை கொண்ட பரம்பரையினரில் வில்லாளன் குறிப்பிட்ட இடத்தை நிறைவு செய்கிறார்.

கனவாக கதையை சித்தரித்து அதன் இறுதியில் புதிய நிகழ்ச்சியை இணைத்து, என்றும் இளமை மாறாத இலக்கியமாக இதனை வில்லாளன் எழுதியிருந்தார். புதிய இலக்கியம் 'கண்ணீர் கோட்டை' யால் மேன்மை பெற்றது.

கதாபாத்திரங்களின் கடிதங்களிலிருந்து பிறந்த கதை 'யாத்திரை'—இதன் அமைப்பு தமிழுக்கே புதிது! பண்பு நலன் மிக்க பாத்திரங்கள்—இயற்கையான நிகழ்ச்சிகள்— சுவையான தமிழ்—அருவிபாடும் அழகுநடை ஆகிய சிறப்புகள் 'யாத்திரை'யை 'சிரஞ்சீவி'யாக்கிவிட்டன. வில்லாளனின் போற்றுதற்குரிய பண்பு இன்னும் ஒன்று. அவரது பாத்திரங்கள் முழுக்க முழுக்க புனிதவானகளோ பாபாத்மாக்களோ அல்ல. பிழைபாடுகள் மலிந்த மனித சமுதாயம் உணர்ச்சிப் புயலினால் மதிமாறிப்போன உள்ளங்கள்—வாழ்வில் 'புனிதத்தன்மைகள் வற்றிய நிலை—நாறிப்போன புழுக்கூட்டம் போல் 'மனித நிலைகள்' 'சாகாமல் சாகும்' விந்தையும் வேதனையும் நிரம்பிய காட்சிகளை வில்லாளன் எழுதினார் எதிர் காலப்பரம்பரையினருக்கு காணிக்கையாக கலையின் அழகையெல்லாம் தேக்கித் திரட்டித் தரும் வில்லாளன் வளரும் தமிழுலகிற்கு வாய்த்த நல்ல செல்வம்.

இவரது 'மனப்போர்' 'காமக்குளம்' 'கிளிக்கூண்டு' போன்றவை அகவாழ்வின் பழுதுபடாத உயிரோவியங்கள். சாக்கடையிலே சயனித்துக் கொண்டு 'சுகாதாரப் பிரசங்கம்' புரியும் புத்தியற்றவர்கள் இங்கே இலக்கிய மன்னர்களாக 'அரிதாரம்' பூசி ஆர்ப்பரிக்கிறார்கள்! ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் 'ஓஹோ!' என்று வெளிச்சம் போடுபவர்களுக்கு 'முட்டாள் சாம்ராஜ்யம்' பல்லாண்டு பாடுகிறது! வாழ்வில் வனப்பை தவிர வேறு எதையும் பார்க்கவிரும்பாத திராணியற்ற ஜீவன்கள் எதை எதையோ எழுதி 'இலக்கிய சேவை' செய்கின்றன. இந்த நிலையில் வில்லாளன் போன்ற இளம்மேதைகளை தமிழகம் புரிந்துகொள்ள வேண்டும், வில்லாளனின் கதைகளில் சமூகத்தின் இழிநிலைக்குத் தேவையான உண்மைத் தத்துவம் நிழலிடுகிறது.

எல்லை மீறிய இலட்சியவாதிகளான சில பாத்திரங்களை படைத்ததால் இவரது பெருங்கதையான 'இருளும் ஒளியும்' புகழ் பெறவில்லை இலட்சியததை பெரிது படுத்தி விளக்கியதால் கலையின் மேன்மை அங்கே களங்கமாகியதில் விந்தையில்லை.

வில்லாளனின் 'துரோகி' பழுதற்ற நவீனம் ஆங்கிலேயரின் ஆதிக்க விரிவை அடிப்படையாக்கி எழுப்பிய கற்பனை இது. உமீன்சந்த் இதில் வரும் சரித்திர பாத்திரம்—அழகிய சித்தரிப்பு. நிறைவுற்ற நாவலாசியராக வில்லாளன் 'துரோகியில்' காட்சியளிக்கிறார் இசை தவறாத இனிய கவிதை வரிகள் போலநிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக அணிவகுக்க, தேன் தமிழ் இனிப்பை வழங்க தேக்கமின்றி நவீனத்தை நிறைவு செய்திருப்பது பெரும் சாதனை.

பூ மிதக்கும் அருவி போன்ற வில்லாளனின் நடை, சரித்திரக் கதைகளில் இன்னும் சோபிதமாகிறது. வனப்புள்ள சில சொற்கள் பாத்திரங்களுக்கு உயிரைப் பெய்து விடுகின்றன. இவரது 'மல்லிகைத் தோட்டம்' புதிய உருவாக்கம். அரசியல் நிகழ்ச்சிகளை சின்னஞ்சிறு உவமைக் கதைகளாக சித்தரித்திருந்தார். இந்த புதுமுறையை முதலில் படைத்துத்தந்தவர் வில்லாளன். பின்னர் மு. கருணாநிதி இதனையே தனிபாணியாக்கி வெற்றி கண்டார்.

வருங்கால பரம்பரை சாகாத இலக்கியங்களை வாழ்த்த—தமிழ் நல்ல பொலிவுபெற—தாயகத்தின் இழிவு அகல வில்லாளனை தமிழகம் இன்னும் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர் அறிவுலகம் தந்த இளம்மேதை—திராவிடர் இயக்கத்தின் ஒரே ஒரு பெருங்கதைப் புலவர். ஆமாம், ஒரே ஒரு வில்லாளன். நமக்கு வாய்த்த மதிப்பற்ற இலக்கிய செல்வம்.

வளர்கின்ற புதிய உலகம் வில்லாளனை பெருமிதத்தோடு வாழ்த்துகிறது!

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப்பித்தன்

7

தொல்காப்பியர் காலத்தில் **பெண்கள் கல்வியும்** நிலைபெற்றிருந்தது என உய்த்துணர இடமுளது. தொல்காப்பியரின் ஒத்த மாணுக்கர்களில் **காக்கைப்பாடினியார்** என்னும் பெண்பாலாசிரியரும் ஒருவராகக் கூறப்படுதலின் அப்பண்டைக் காலத்தே பெண்கள் கல்வி உரிமையுடையோராய் இருந்து வந்தனர் என்பதும், யாப்பிலக்கணம் போன்ற பெரும் நூல்கள் இயற்றும் அளவிற்கு பெண்கள் சிறந்த புலவர்களாக வாழ்ந்து வந்தனர் என்பதும் தெரியலாம்.

"செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு
மறிவு மருமையும் பெண்பாலான"

சூத் 15 தொல். பொருள்—பொருளியல்

என்ற தொல்காப்பியப் பொருளியல் சூத்திரம் பெண்கள் கல்வியை உய்த்துணர இடம் தருகின்றது. ஆனல் உரையாசிரியர்களோ இக் கருத்தினை உடன்படவில்லை.

தொல்காப்பியர் காலத்திற்கு பிற்பட்ட காலமான சங்க காலத்தில் பெண்கள் கல்வி சிறப்புற்றிருந்த உண்மை தெரிய வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் திராவிடத்தில்தான் பெண் கல்வி போற்றப் பட்டு வந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும். புலமையும் புகழும் பெற்ற பல பெண்பாற் புலவர்கள் மலிந்திருந்த நாடும் திராவிட நாடுதான். சங்க கால நூல்களில் காணப்படும் பெண் புலவர்கள் பாடியுள்ள பாக்கள் நம் பண்டைத் திராவிடப் பெண்கள் கல்வியின் பெருமையையும் அருமையையும் நவிலுகின்றன. இந்திய கல்வி வரலாற்றை எழுதியுள்ள ஆராய்ச்சியாளர்களும் ஆசிரியர்களும் பண்டைக் கால பெண்கள் கல்வியைப் பற்றி எழுதுதற்கு ஒன்றும் அகப்படாது தடுமாறி மழுப்பிவிட்டு மேல் சென்று விடுகின்றனர். பண்டைய திராவிடப் பெண்கள் கல்வி அறிவில் சிறந்திருந்த வரலாற்றையோ, எண்ணும் எழுத்தும் பொருளும் ஆய்ந்து நிறை அறிவு புலவர்களாகத் திகழ்ந்த எண்ணற்ற பெண்பாற் புலவர்களின் செய்தியைப் பற்றியோ தெரிந்திராத ஆராய்ச்சியாளர்களாகவும் சரித்திர ஆசிரியர்களாகவுமே காணப்படுகின்றனர். இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் ஏற்ற கல்வி சரித்திரத்தை எழுத முற்பட்ட ஆசிரியர்கள் பண்டை திராவிட நாட்டின் கல்விச் சிறப்பைப் பற்றி, குறிப்பாக பெண்கள் கல்வி பற்றி, ஒரு சிறிதும் தெரியாத அறிவு—சூன்யங்களாகவே யுள்ளனர். இவர்கள் வேத புராணங்களிலும் இதிகாச இராமாயணங்களிலும் வீழ்ந்து மூழ்கி மூச்சுத் திணறி அக்காலக் கல்வியைப் பற்றி எழுதுவதைக் காண அவர்கள்பால் உண்மையிலேயே அனுதாபம் ஏற்படுகிறது! அவர்கள் தெரிந்ததும் கற்றதும் அவ்வளவுதான்! இந்தியா என்ற நிலப்பரப்பில் திராவிட நாடும் ஒன்று என்ற எண்ணம் அவர்கட்கு இருந்தால்தானே அந்நாட்டு கல்வித் துறையைப்பற்றி தெரிந்துகொள்ள ஆர்வம் பிறக்கும்! அவர்கள் எழுதிக் குவித்துள்ளனவெல்லாம் **"லார்ட் மெக்காலே"** கூறியபடி வெறும் குப்பைக் கூளங்கள்தாம். நிற்க,

பெண் புலவர்களது கல்வித் திறனையும் புலமையினையும் வியந்தும் புகழ்ந்தும் ஆதரித்தும் வந்தனர் அக்கால தமிழ் வேந்தர்களும் வேளிர்களும் பெருநிலக் கிழாரும். அவர்கட்கு பரிசில்கள் நல்கியும், ஆடையும் பொன்னும் பொருளும் கொடுத்தும் அவர்களது புலமையை வளமுறச் செய்தனர். அவர்களது அறிவின் மேன்மையைக் கண்டு தமக்கு அமைச்சர்களாகக் கொண்டனர். அவர்களது திறமையையும் செயலாற்றலையும் தெரிந்து தமக்கு உகந்த நாட்டுத் தூதுவர்களாகவும் அமைத்துக் கொண்டனர், இப்படியெல்லாம் அக்காலப் பெண்கள் கல்வி சிறப்பும் சீரும் அடைந்திருந்தது.

காக்கைப் பாடினி நச்செள்ளையார் என்பார் இசைத் தமிழ் வல்லவராயிருந்தார் பாடினி என்னும் சொல்லிற்கு இசை வாணி என்பது பொருள்.

ஒக்கூர் மாசாத்தியார்.

ஔவையார்

காவற் பெண்டு

குறமகள் இளவெயினி. இவருக்கு இப் பெயர் சாதியால் வந்தது என்பர் உ. வே. சாமிநாதய்யர்.

தாயங் கண்ணியார்.

பாரி மகளிர்: பாரியினுடைய மகளிர்

பூதபாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு.
பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்.

பேய் மகள் இளவெயினி: பேய் மகள்—தேவராட்டி; பூசாரிச்சி; பேயினது ஆவேச முற்றவள் இவ்வகையார் இக்காலத்தும் ஆங்காங்கே உள்ளார் எனக் கூறுவர் உ. வே. சாமிநாதய்யா.

வெண்ணிக் குயத்தியார்: வெண்ணி—ஒரூர்; குயத்தி—குயச்சாதியிற் பிறந்த மாது என்று கூறுவர்—உ. வே. சாமிநாதய்யர்.

வெறிபாடிய காமக்கண்ணியார்.

இப்படி எடுத்துக் காட்டியவாற்றல் சங்க காலத்தில் பெண்பாலார் மிகுதியும் கல்வியை விரும்பிக் கற்று புலமையடைந்திருந்தனர் என்பதும், சாதி பாகுபாடின்றி எல்லா வகுப்பினரும் கல்வியில் புலமை பெற்று ஓங்கிய புகழை யடைந்திருந்தனர் என்பதும் தெரியவரும். கீழ்க்குலமென நினைக்கப்பட்ட குறமகளிராயினுஞ்சரி, உயர்குல அரசியாயினுஞ் சரி கல்வி நலம் பெற்று புலமை அடையும் காலமாயிருந்தது அச் சங்ககாலம் என்பது தெரியவரும். மண்ணனும் மண்ணனுக்கும் அறிவூட்டும் ஆன்றோராயும் அவைப் புலவர்களாயும் அக்காலப் பெண்கள் வாழ்ந்த சிறப்பே சிறப்பு. அப்படிப்பட்ட பொற்காலம் இனிவருமோ! திராவிடநாடு திராவிடருக்கே ஆகும்போது அப் பொற்காலம் வரும் என்று கூறுகின்றீர்களா! மெத்த மகிழ்ச்சி!

சங்க கால பெண்கள் கல்விச் சிறப்பு இப்படியெல்லாம் தெரிய வருவதால் தொல்காப்பிய கால வழக்கம் பெரிதும் மாறுபட்டு உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமின்றி கல்வியானது பொதுமக்கள் உடமையாக சிறந்திருந்தது என்னும் உண்மை தெரிய வருகிறது. அத்தகு உயர்நிலையை அடைய எண்ணுதல் வேண்டும் இக்கால திராவிடப் பெண்கள். இக்காலத்தைவிட சங்ககாலமே ஆயிரம் மடங்கு சிறந்திருந்தது பெண்கள் கல்வித்துறையில் என்று கூறின் நூற்றுக்கு நூறு உண்மையே யாகும். சங்க நூல்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்புலவர்கள் காணப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அக்காலத்துத் தாய்மார்கள் தம்மக்களை கல்விச்சாலைகளில் சேர்த்தும் ஆசிரியர்களிடம் விட்டும் கல்வி பயிலும்படி செய்து அம் மக்கள் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குவதைக் கண்டும் கேட்டும் பெருமகிழ்வெய்தினர். தாம் பெற்ற ஒரு வயிற்று மக்களுள் கல்விச் சிறப்பு பெற்றவர்களையே பெரிதும் விரும்பினர். இவ்வுண்மைகளை

"பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்"

—புறம் 183

எனும் புறநானூற்றுப் பாட்டினாலும்

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டத் தாய்"

எனும் திருக்குறள் வெண்பாவாலும் தெரியலாம்.

பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயின் மனம் வேறுபடும் என்ற கருத்தை பாண்டியன் நெடுஞ்செழியன் கூறுவதினின்றும் அக்கால தாய்மார்கள் தம்மக்களை கல்வி அறிவுடையோராகச் செய்வதில் அக்கரை கொண்டிருந்தனர் என்பதும் புலப்படும். தான் பெற்ற அருமை மக்கள் கல்வி கேள்விகளிற் சிறந்து சான்றோர் மதிப்பிற்கு உரியராகும்போது அவர்களை தான் ஈன்ற போதுற்ற மகிழ்வினும் பெருமகிழ்வடைகின்றார்கள் தாய்மார்கள் என்ற உண்மை உலகியல்ல உணர்த்தும் பொய்யாமொழிப் புலவரின் சொல்லில் அக்காலத் தாய்மார்கள் தம் மக்களுக்கு செய்ய வேண்டியதான கல்வி கற்பிக்கும் அவசியத்தை உணர்ந்திருந்த உண்மையை தெரிவித்திருப்பது காண்க.

தாய்வயிற்றில் பிறந்த மக்களுள் கல்வி அறிவுடையவனை தாய் பெரிதும் விரும்புவாள் என்னும் கருத்தே புறநானூற்று பாட்டில் வருவதாகும். கல்வி விசேடமுடையவனை உயர்ந்தார் வகுப்பிலும் கல்வி விசேடமில்லாதவனை கீழோர் வகுப்பிலும் பிரித்துவைத்துப் பேசுதற்கு தாய்மனம் இசையாது என்னும் கருத்தையும் கூட்டிக் கொள்க. இதேபோன்றே ஒரே குடியில் பிறந்தோரில் கல்வி கற்றோர் சிறப்பிக்கப் படுவதனால் உயர்ந்தோர் எனும் வகுப்பில் சேர்த்து பேசிடுபவர் என்பதும் கல்வி சிறப் பற்றோர் கீழோர் வகுப்பில் சேர்த்துப் பேசப்படுவர் என்பதும் இல்லை என்பதும் தெரிக.

"ஒருகுடிப் பிறந் பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்"

—புறம் 183

என்று நெடுஞ்செழியன் கூறும் பாட்டின் மேற்கூறியக் கருத்தைப் பொருத்திப் பார்த்தால் நலம்.

தான் பெற்ற மக்கட்கு கல்வி கற்பிக்கும் அவசியத்தை தாய் உணர்ந்திருந்தாள் என்பதும், கல்வி கற்பிக்கும் காரியத்தை தந்தை தன் கடனாகக் கொண்டிருந்தான் என்பதும், ஆகவே தம் மக்களை கல்வி அறிவுடையவர்களாக வாழவைக்க அக்கால பெற்றோர் தம்இன்றியமையாக் கடமையாகக் கொண்டிருந்த உண்மையை

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
யொளிறுவா ளருஞ் சமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறநானூறு 312)

என்னும் புறநானூற்றுப் பாடலால் தெரியலாம்.

—தொடரும்

"திராவிடன்" சந்தா விவரம்

ஆண்டு சந்தா	...	ரூ.	8 0 0
ஆறுமாதம்	...	ரூ.	4 0 0
வெளிநாடு			
ஆண்டு சந்தா	...	ரூ.	9 0 0
ஆறு மாதம்	..	ரூ.	4 8 0

சிறுகதை

பரம்பொருள்

அரசிளங்கோ

1

தென்றல் காற்று ஜிலு ஜிலு வென்று வீசிக் கொண்டிருந்தது! வெளியில் உள்ள 'குரோட்டன்ஸ்' செடிகள் சலசல வென்று ஒலி இசைத்தன வீசிக் கொண்டு உள்ளே நுழைந்தார் வைரவன் செட்டியார்.

ஏ தையல்நாயகி! ஏ தையல்நாயகி!

உள்ளே வேலையாய் இருக்கேன்!

இங்கே வந்துட்டுப் போடி. மகா வேலையை கண்டுவிட்டாள்.

என்னங்க அம்மா கத்திகிட்டே யிருக்கிங்களே, என்று கையைக் கழுவிக் கொண்டே புழக்கடையிலிருந்து வெளியில் வந்தாள் வைரவன், செட்டியாரின் வாழ்க்கைத் துணைவம் தையல்நாயகி அம்மாள்!

தையு! இதைப் பாரு! தன் மடியிலிருந்து எதையோ வெளியில் எடுத்தார் வைரவனார்.

அவரைப் பார்த்துக் கொண்டே என்னங்க இது? என்று அசிரத்தையாகக் கேட்டாள்.

ஏண்டி சிரிக்கிறே?

சிரிக்காம என்ன செய்யறது! நீங்க செய்யறதைப் பார்த்தா சிரிப்பா வறது. இப்பத்தான் முனியன் லேடி டாக்டரை கூட்டிக்கொண்டு வந்தான். மருந்து சாப்பிடணும்னு சொல்லிவிட்டுப் போனாங்க! மூலையில் நின்றுகொண்டிருந்த முனியனை கடைக்கண்ணால் பார்த்தாள் தையல்நாயகி!

அதுசரி...கிடக்கட்டும்...இந்தா! நீ பாட்டுக்கு முணுமுணுக்காதே. புதசா மந்திரிச்சக்கயிறு நேற்றுக் கொடுத்தேனே தங்கத் தாயத்து, அதோடு போட்டு கட்டிக்கொள்.

அப்பா! பொழுதுபோனா, பொழுது விடிஞ்சா இதையே திருப்பித் திருப்பிப் பாடுகிறீர்களே! உங்களுக்கு வேறு எதிலேயும் ஆசையே இல்லையா?

நீ பெரிய வாயாடியா போயிட்ட. எப்பப்பார்த்தாலும் வம்பு, வேடிக்கை கொஞ்சமாவது கவலை இருந்தாதானே.

கவலை பட்டுப்பட்டு நானும் பார்த்துட்டேன். சுத்தாத கோயிலில்லே; முழுகாத குளம் இல்லே. அரசமரத்தை ஆயிரம்தடவை சுத்தியும் பார்த்தாச்சு! என்னங்க பிரயோசனம்?

ஏது தைய் உபதேசம் பலமாயிருக்குது. உன் தம்பி வாசனை உனக்கும் வீசுதாக்கும்.

எதுக்குங்க அவனைப்போயி வீணு ரிழுக்குறீங்க.

பணம் போட்டு வரவழைத்த தாயத்தடி பணம் போட்டு வரவழைத்த தாயத்து!

ஊரில் உள்ளவங்க ஏமாந்து போனுங்கன்னு நீங்களுமா ஏமாறணும்! ஜலந்தர்காரன் நல்லா ஏமாத்தருன். தாயத்தைக் கட்டித்தான் பிள்ளை பொறக்கப் போகிறதாக்கும்! என்று 'நங்' கென்று தாடையில் இடித்துக்கொண்டு உள்ளே சென்று விட்டாள் வைரவரின் தரும பத்தினி!

சண்டை சமயத்தில் திடீரென்று பணக்காரர் ஆனவர்களில் வைரவன் செட்டியாரும் ஒருவர். புத்திர சம்பத்தைத் தவிர எல்லா சம்பத்தும் பூரணமாக இருந்தது. அவருக்கு வைரவனுரின் மனதில் மகனே, மகளோ இல்லை என்ற குறை நீண்ட நாளாக அவர் மனதை வாட்டி வந்தது. அவர் செய்யாத பூசை இல்லை! நீராடாத புண்ணிய ஸ்தலம் இல்லை! சுற்றி வராத கோயில் இல்லை! சோதிடர்களும் மந்திரவாதிகளும்தான் அவர் சொத்துக்கு வாரிசோ என்று அந்த ஊர் ஜனங்கள் பேசிக் கொண்டதில் சந்தேகமே இல்லை!

வயிரவன் செட்டியார் குழந்தைக்காக தருமவானுக மாறியது என்னவோ உண்மைதான்! கொடை வள்ளல் என்ற பட்டம் கிடைத்ததும் உண்மைதான் செட்டியாரின் தருமம் இல்லாதவருக்குப் பயன்படவில்லையே என்பதும் உண்மைதான்!

ஆனால் குழந்தை மட்டிலும் என்னவோ பிறக்கவில்லை!

நாட்கள் மட்டிலும் உருண்டு கொண்டிருந்தன!

ஆண்டு ஒன்றும் ஓடிவிட்டது?

2

டாக்டர்!

என்ன வேணும்!

என் மனைவி மூர்ச்சித்துக் கிடக்கிருள். பிரசவ சமயம்...

என்னுல் இப்போது வரமுடியாது' செட்டியார் வீட்டிலிருந்து செய்தி வந்திருக்கிறது. நிறை மாதமாம்! என்று சொல்லிக் கொண்டே காரில் ஏறிக் கொண்டார் டாக்டர் தருமலிங்கம்.

முனியனுல் என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிந்தைக் குழம்பியது. அங்குமிங்கும் ஓடினுன். அம்மன் கோயிலுக்குச் சென்றுன். ஆயிரம்முறை வேண்டிக் கொண்டான். வருத்தம் நிழலாட வீடு திரும்பினுன்.

மனைவி உள்ளே புரண்டு கொண்டிருந்தாள். இடையிடையே முனகல். புரண்டு புரண்டு முனகிக் கொண்டு நெளிந்தாள். அம்மா! அம்மா! என்று கத்திக் கொண்டிருந்தாள். அம்மாவையே அறியாதவள்! இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மாவாகப் போகிருள்! முனியனுக்கு ஒருபக்கம் மகிழ்ச்சி. தந்தையாகப் போகிறோம் என்று எண்ணிப் பூரித்தான்! அவன் இதயம் கண்ட நினைவில் அப்படியே மெய்மறந்தான்?

முனியா!

கண் திறந்து பார்த்தான்.

இன்னுமா டாக்டரை அழைத்துக் கொண்டு வரவில்லை! என்று சத்தம் போட்டுவிட்டு உள்ளேசென்றுள் கிழவி —உதவிக்காக வந்தவள்.

முனியன் தலைதெறிக்க ஓடினுன் செட்டியார் வீட்டை நோக்கி.

3

கொடைவள்ளல் வயிரவன் செட்டியாரின் விசுவாசமான ஆள் முனியன். முனியன் கொஞ்சம் படித்தவன்தான். பகுத்தறிவு அது...இது எதுவுமே அவனுக்குப் புரியாது. புரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் அவனுக்கு உண்டாகவேயில்லை அதைப்பற்றி அவன் கவலைப்பட்டால்தானே.

முனியன் வாழ்க்கை சுமாராகவே இருந்தது. ஆரம்பக் காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டவன். செட்டியார் மனம் இரங்கி வேலைப் போட்டுக் கொடுத்தார். ஆனுல் அவன் என்னமோ கடவுள்தான் கண் திறந்து பார்த்தார் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறுன். வயிரவன் செட்டியாரின் தருமபத்தினி தன்னிடம் அபாரமான அன்பு கொண்டிருக்கிருள் என்பதை சில சமயங்களில் அவன் மறந்துவிடுவதும் உண்டு.

எல்லாம் வல்ல பரம் பொருளுக்கு நைவேத்தியம் செய்ய தவறவே மாட்டான். தேங்காப்பழம் இல்லாமல் வெறுங் கையுடன் கோயிலுக்குப் போனது கிடையாது. வெள்ளி செவ்வாய் தோறும் கற்பூரமாகக் கொளுத்துவான். செட்டியார் தரும் பணத்தில் பெரும் பகுதி பரம் பொருளுக்குத்தான் கற்பூரமாகப் புகைந்து கொண்டிருந்தது. வயிரவன் செட்டியாரைப் போல மகாபக்தன்.

4

வயிரவனுர் வீட்டில் ஒரே கூட்டம். ரொம்பபேர் வெளியில் போவதும் வருவதுமாக இருந்தனர். செட்டியார் வெளியில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார். உள்ளே அடிக்கடி எட்டிப் பார்க்கத் தவறவில்லை. டாக்டர் சிரித்துக் கொண்டே வெளியில் வந்தார். செட்டியாருக்கு சிங்கக் குட்டி பிறந்திருக்கிறுன், என்றுர் சிரித்துக்கொண்டே.

முனியன் தலைதெறிக்க அப்போது தான் உள்ளே நுழைந்தான்.

முனியா! கடைக்கு ஓடிப்போய் சர்க்கரைப் பழம் சீக்கிரமாக வாங்கிக்கொண்டுவா? என்று உத்தரவு போட்டார் செட்டியார்.

முனியன் மேலும் கீழும் பார்த்தான், இல்லிங்க எசமான். என் பெண்சாதிக்குப் பிரசவ சமயம். டாக்டர் அய்யாவைக் கூட்டிக்கிட்டு..........அவன் சொல்லி முடிக்கவில்லை.

சரி, சரி! கடைக்குப் போய்வா. எல்லாம் கடவுள் காப்பாற்றுவார் என்றுர் செட்டியார் ஆமாம், ஆமாம்! கடவுள் இருக்கிருர்! என்றுர் டாக்டரும்.

கடைக்குப் போய் திரும்பி வருவதற்குள் முனியனுக்கு எவ்வளவோ நேரமாய் விட்டது. டாக்டர் காரில் போய் விட்டார். வெறும் கையுடன் வீட்டை நோக்கி வெறி வேகத்துடன் ஓடினுன் முனியன்.

முனியன் குடிசை வாசலில் ஒரே கூட்டம் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அங்கும் இங்கும் நின்று கொண்டிருந்தனர்.

'ம்' அவ்வளவுதான் கொடுத்து வைத்தது என்றுர் ஒருவர்.

முனியனின் கண்கள் நீரில் அமிழ்ந்து விட்டன. குடிசையினுள் சிறிய படம். படத்தில் காலையில் பக்தியுடன் சாத்தப்பட்ட மலர் மாலை! வெற்றிலைப் பாக்கு, தேங்காய், பழம் எல்லாம் அதன் அடியில்! வாசம் தந்த ஊதுவத்தியின் சாம்பல் தரையில் கிடந்தது! எங்கும் நிறைந்த பரம்பொருள் படத்திலும் இருந்தார்! முனியனின் கண்கள் படத்தைக் கண்டு கண்ணீர் வடித்தன!

●

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாங் ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127· பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினுல் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னுருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினுலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை. சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூ.	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, வில்லயன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி

8

வடஇந்தியாவில், ஆண்களின் உடையில் குறிப்பிடத்தக்கது குல்லாய் அல்லது தலைப்பாகையாகும்; சிலருடைய தலைப்பாகை 10 முழத்திற்கு மேற்பட்ட நீளமான துணியால், சுற்றுமேல் சுற்றாகப் பல சுற்றுகள் சுற்றப்பட்டிருக்கும்!

குல்லாயோ, காங்கிரஸ்காரர்கள் அணிகின்ற குல்லாய் போன்று, பலவித நிறத்தில் அணிந்திருப்பார்கள். அதிலும், சிலர் அணிந்திருக்கும் குல்லாய் நமது நாட்டுக் குரங்காட்டிகள் குரங்குக்கு அணிவிக்கும் குல்லாய் போன்றே இருக்கும்!

இடுப்பில், ஒருவிதமான கால் சட்டை (பைசாமா) அணிபவர் சிலர்! 10 முழ வேட்டியை தாறுமாறாகச் சுற்றிக் கொண்டிருப்பவர் பலர்! உடம்பில்நீண்ட (சட்டை) அங்கி! இவையெல்லாம் போகமேல் வேட்டி ஒன்று! இவைதான் வடஇந்திய ஆண்களின் சராசரி உடைகள், இதிலும் குறிப்பிடத்தக்கது மிகப்பெரும்பாலோர் அழுக்குப் படிந்த உடையோடு திரிவது தான்.

வடஇந்தியப் பெண்களின் உடையில் குறிப்பிடத் தக்கது முக்காடாகும். அங்கு முக்காடு போடாத பெண்களைக் காண்பது அரிதினும் அரிது. நாகரீகப்பெண்கள் நீண்ட கால் சட்டை (பைசாமா)யும், மேல்சட்டையும் அணிந்து, தனியாக ஒரு துண்டால் முக்காடு போட்டிருப்பார்கள்.

பழங்கால முறையில் இருப்பவர்கள், 18 முழச்சீலையை உடுத்தி, நமது பெண்களைப் போலவே மார்பிலும், தோளிலும் போட்டுத் தலையில் கொண்டுவந்து முக்காடாக மடித்து விட்டிருப்பார்கள்.

தென்னாட்டில் 10 பெண்கள் மொத்தமாக முக்காடிட்டுக் கொண்டு போனால், ஏதோ துக்க நிகழ்ச்சி என்று கருதுவார்கள். வடநாட்டில் கூட்டமாக முக்காடிட்ட பெண்கள் போவதும், வருவதும் சர்வசாதாரணம். வடநாட்டில் இன்னொரு வழக்கம் 'கோஷா' என்பதாகும். தென்னாட்டில் சில முஸ்லீம் பெண்கள் மாத்திரம், கோஷா முறையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி திரு. இராசேந்திர பிரசாத் அவருடைய 'இந்தியா பிரிக்கப்பட்டால்' என்னும் நூலில் சொல்கிறார்:—

"பழைய இந்து வழக்கம் கோஷாவை ஏற்கவுமில்லை; போற்றவுமில்லை. மனாளனோடு நின்று செயலாற்றக் கூடிய எல்லாக் காரியங்களிலும், பெண் வெளி வந்து பங்கெடுத்து இருக்கிறாள் என்பதற்கு வடமொழி இலக்கியங்களில் நிறைய சான்றுகள் இருக்கின்றன, தற்காலத்திய கோஷா முறை வழக்கம் முஸல்மான்களிடமிருந்து முழுதும் கடன் வாங்கப்பட்டது. முஸ்லீம் ஆதிக்கத்தின்கீழ் வந்த இடங்களிலே இது கடுமையாக மேற்கொள்ளப் படுவதைக் காணலாம். வடநாட்டிற்போலத் தென்னாட்டில் முஸ்லீம் ஆதிக்கம் நுழையாததால் அங்கு இது அவ்வளவாகக் காணப்படவில்லை"

திரு. இராசேந்திரர் வாக்குப்படி தென்னாட்டுக்கும் வடநாட்டிற்கும் உடை உடுப்பதிலும் வித்தியாசமிருக்கிறதென்று தெளிவாகும். இந்த இலட்சணத்திலிருக்கும் வடஇந்தியர்கள், நமது, உடை நடைமுறையைக் கேலி செய்து, சினிமாப் படம் தயாரிக்கும் அளவுக்குத் துணிந்திருக்கிறார்கள்!

"சாச்சா செளத்திரி" போன்ற வடஇந்திய சினிமாப்படங்களைப் பார்த்தாவது ஏக இந்தியாவாதிகள் அறிவு பெற வேண்டும் என்பது நமது ஆசை.

இதை இத்துடன் விடுத்து மேனியின் நிறம் பற்றிப் பேசுவோம்.

மேனியின் நிறம்

மேனியின் நிறம் என்றால் உடம்பின் நிறம் மட்டுமல்ல—தலை மயிர் நிறம்—கண்களின் நிறம் எல்லாம் அடங்கும்.

ஏனெனில்; ஒவ்வொரு நாட்டினரும் தலை மயிரின் நிறத்திலிருந்து கண், உடம்பு ஆகியவற்றின் நிறம் வரை பலவிதமாக வேறுபட்டிருக்கின்றனர். அந்தந்த வேறுபாட்டுக்கு ஏற்றபடி அவரவர் விரும்புகின்ற நிறமும் வேறுபடுகிறது.

ஷேக்ஸ்பியர் போன்ற ஆங்கிலக் கவிஞர்கள், அவர்களுடைய காவியங்களில் அழகு பொருந்திய மங்கை ஒருத்தியை வர்ணிக்கும்போது, தலைமயிரை வர்ணிக்கும் கட்டங்களில் (Golden Hair) தங்கம் போன்ற மயிர் என்று வர்ணிக்கிறார்கள். இதனை ஆராயும்போது ஆங்கிலப் பெண் ஒருத்திக்குத் தப்பித்தவறிக் கறுப்பு மயிர் இருந்தால் அவளுடைய அழகுக்கு 'இழுக்கு' என்றுதானே கொள்ள வேண்டும்?

தமிழ்க் கவிஞர்கள், இதற்கு நேர் மாறாக அவர்களுடைய காவியங்களில் "வண்டு மொய்த்தனைய கூந்தல்" என்றும், "வரி அறல் சூழ்—சைவலத்தின் கொத்து தனைப் போன்றும்—இவ்வகையே—வேரிச் செழுமலரும், வில்வேள் கணைமலரும், வாரிச் செருகும் மலர்க் கூந்தல்" என்றும், கறுப்பு நிறத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

இதே தமிழ்க் கவிஞர்கள், சற்று செம்பட்டையுள்ள கூந்தலை "அழல் கொண்ட தன்ன குழல்". அதாவது தீப்பற்றி எரிவது போன்ற கூந்தல், என்று இழித்துக் கூறினர்.

கண்ணிலுள்ள மணி, கறுப்பாக இருப்பதை நாம் அழகான கண் என்று கருதுகிறோம். 'கருமணியில் பாவாய் நீ போதாய்' என்றார் வள்ளுவர்!

ஆங்கிலேயர்கள் வெளிறிய நீலநிறமுள்ள கண்ணை, அழகான கண் என்கிறார்கள்! நம்மவர்கள் வெளிறிய நீலநிறக் கண்களைப் பூனைக்கண் என்கிறார்கள்!

வடஇந்தியர்கள் அடர்ந்த நீலநிறக் கண்களையே அழகான கண்கள் என்கிறார்கள்!

மேனியின் நிறம்பற்றிக் குறிக்கும்போது நமது கவிஞர்கள். பொன்னிறமேனி என்றும், மாந்தளிர்மேனி என்றும், இருவிதமாக வர்ணிக்கின்றனர். பொன்னிறம் என்பது தங்கம் போன்ற நிறம் என்றும், மாந்தளிர் என்பது மாமரத்தின் தளிர் போன்ற நிறம் என்றும் பொருள்படும். மாந்தளிர் என்பது நிறத்தைக் குறிப்பிடாது என்றும், அது தளிரினுடைய மென்மையையும் பளபளப்பையும் குறிப்பிடும் என்றும் பொருள் சொல்வோரும் உள்ளனர். அத்தகையோர்:-

"............................
பொழிபெயல் வண்மையின் அசோகம்தண் [காவினுட்
கழகவின் இளமாவின் தளிரன்னாய்!... ..."

என்று வரும் கலித்தொகை 57-ம் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறி யிருப்பதைக் காண்பாராக.

யார் எப்படிக் கூறினாலும் திராவிடத்தில் பொன்னிற மேனியர் சிறுபான்மையாகவும் தவிட்டு நிறமேனியர் அதிகமாகவும் இருப்பதால், மாந்தளிர் என்பது தவிட்டு நிறத்தை வர்ணிப்பதாகக் கொள்வதே செம்பொருள் என்பது நமது கருத்து.

வடஇந்தியர்கள் வெள்ளை நிறத்தையே விரும்பத்தக்க நிறம் என்கிறார்கள்.

தமிழ் நாட்டில் ஆதிநாட்களில் ஆங்கிலேயரைப் பறங்கியர் என்று கூறுவது வழக்கம். இந்த 'பறங்கியர்' என்னும் பட்டம் அவர்களின் நிறத்தின்மீது கொண்ட வெறுப்பினால் உண்டானதே.

இவற்றிற்கெல்லாம் காரணம்; அந்தந்த நாட்டின் பெரும்பாலான மக்களின் நிறமே, மனதுக்கு இசைந்த நிறமாகக் கருதப்படுவதுதான்.

தமிழகத்துப் புலவர்கள், தவிட்டு நிற மேனியை மாந்தளிரை உவமானமாக்கி வர்ணித்திருப்பதும், மற்ற நாட்டுப் புலவர்களும், அவரவர் நாட்டின் இயல்புக்கு ஏற்றபடி வர்ணித்திருப்பதும் சராசரி ஒப்புதல் நோக்கம் பற்றியேயாகும்.

கவிஞர்கள் எவ்வளவுதான் சிறப்பாக வர்ணித்தாலும் உடம்பின் நிறத்தைப் பொறுத்த மட்டில் பொன்னிறம், வெண்மை நிறம் ஆகியவற்றில், யாருக்கும் வெறுப்பில்லை என்பது அனுபவபூர்வமான உண்மை! 'சூடு ஒரு சுவை; சிவப்பு ஒரு அழகு' என்கிற பழமொழியே இதனை உறுதிப் படுத்தும்!

வெள்ளைநிறங் கொண்டவர்கள், அவர்களைவிடத் தாழ்ந்த நிறங் கொண்டவர்களைக் கேலி செய்வதும், இழிவாக நடத்துவதும் இயற்கையாக இருக்கின்றன.

அப்படியே, கேலி செய்யாவிட்டாலும் —இழிவாக நடத்தாவிட்டாலும் — வெண்ணிறங் கொண்டவர்கள் கருநிறங் கொண்டவர்களிடம் அருவருப்பான உள்ளத்துடன்தான் பழகுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆப்ரிக்காவில், நீக்ரோவர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் நீண்ட காலமாக நடந்துவரும் போராட்டம்; நிறம்பற்றி உண்டான அருவருப்புக் காரணந்தான்!

வட இந்தியர்களைவிட திராவிடர்கள், சற்று கறுப்பு நிறத்துடன் இருக்கிறார்கள் என்பதை எவரும் ஒப்புக் கொண்டு தான் தீரவேண்டும். இங்குள்ள நிறவித்தியாசம் ஆப்ரிக்கா போன்ற கடுமையான மனக் கசப்பை — மோதுதலை — உண்டாக்காவிட்டாலும், வேற்றுமை இல்லாத ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்க முடியாது என்பதை அறிவுடையோர் ஒப்புக் கொள்வர்.

இதுவரை நிறபேதங்களால் ஏற்படும் வேற்றுமை உணர்ச்சியை ஆராய்ந்தோம். இனி, உறுப்புகளின் அளவு வித்தியாசங்களை ஆராய்வோம்.

உறுப்புகளின் அளவு

உறுப்புகளின் அளவு என்றால், இன்னின்ன உறுப்புகள் இன்னின்ன அளவுப்படி இருக்க வேண்டும் என்பது அல்ல.

எப்படியெனில்:- திராவிட மக்களில் சிலர் $6\frac{1}{2}$ அடி உயரம் இருக்கிறார்கள். வேறு சிலர் $4\frac{1}{2}$ அடி உயரம் இருக்கிறார்கள். இவர்

‘பக்தரே உணர்வீர்!’

"பூவையான்"

அரசிய லாரே! அரசிய லாரே!
அடியேன் குறையை அறிவிக் கின்றேன்.
நாட்டினர் குறையைப் போக்கிட வந்து
நாட்டினை ஆளும் வாய்ப்பேற் ருேரே!
எங்களின் குறைகளை எடுத்துரைத் திடவே
எனக்குரி மையை வழங்கிடு வீரே!
அந்நியன் சென்ற பிறகிந் நாட்டை
ஆள்கின் றீரே, ஏழாண் டாக.
ஆயிர மாயிரம் சம்பள மாக
அதற்கும் மேலே படிப்பண மாகப்
பணத்தைப் பெற்றுத் திரிகின் றீரே!
பலவகை இன்பம் பெறுகின் றீரே!
ஏழைக் குரலின் எதிரொலி தன்னை
ஏனோ உணர மறுக்கின் றீர்நீர்?
அரசாங் கத்தின் ஊழிய ராக
அல்லும் பகலும் உழைத்துடல் சோர
வீட்டை நாடி விழிநீர்ப் பெருக
வழிபார்த் திருக்கும் இல்லாள் தன்னை;
வாடிவ தங்கி வயிறுசு ருங்கிப்
பாலுக் கழுது பதைபதைக் கின்ற
பச்சைப் பசலை படருங் கொடியை;
வயதுமு திர்ந்த பெற்றோர் தம்மைக்;
கண்டதும் அவனின் உள்ளம் உருகும்
காட்சியை என்றுங் கண்டதில் லையோ?
உண்மையில் நீங்கள் மனிதர்கள் என்றால்
உங்களின் உள்ளம் உடைந்தே தீரும்
உயர்தர மாளிகை உறைவதற்காக;
உயர்தர உடைகள் உடுப்பதற் காக;
உயர்தர உணவு உண்பதற் காக
உயர்தரச் சிறுகார் ஊர்சுற் றுதற்கு;
உயர்தர மக்கள் உம்மொடு பழக
உயர்தரம் உயர்தரம்: எல்லாம் உயர்தரம்
வாழ்வின் உச்சிக் கிளைக்கே தாவி
வானம் பாடிபோல் கானம் பாடி
வாழ்வில் இன்பம் பெறுகின் றீரே!
வந்தது எவ்வழி என்றுபா ரீரோ?
இந்தஉம் வாழ்வின் உயிர்யார் கையில்
இருக்கிற தென்று எண்ணிப் பாரீர்!
உங்க ளின்பத்தின் ஒவ்வோ ரணுவும்
ஊரு ராக அலைந்தழி கின்ற
உத்தம மக்களின் இரத்தத் துளிகள்
உயிரைத் துறந்துபல் லுயிர்களைக் காக்க
உரிமையைக் கண்ட உண்மைத் தியாகிகள்
உகுத்தகண் ணீரென் றுணரவல் லீரோ?
ஏழை எரிமலை என்றோ ஒருநாள்
எதிர்பா ராமல் வெடிப்பது உறுதி!
கொந்தளிக்குங்கடல் கொப்பளித்தொருநாள்
கொடுமைக ளழிந்திடப் போவதும் உறுதி!
பாதம் பணிந்து, பதவியி லமர்ந்து
"பாரதம்" பேசிடும் "பக்தரே" உணர்வீர்!

○

களை முறையே நெட்டையர் என்றும், குட்டையர் என்றும் ஏனையோர் கேலி செய்வதை நாம் அறிவோம்

அவ்வாறு கேலி செய்பவர்கள், மனிதன், இவ்வளவுதான் வளர வேண்டும் என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள் என்று கூறமுடியுமா?

பின் ஏன் கேலி செய்கிறார்கள் என்றால் அவர்கள் சராசரி பார்க்கின்ற மனிதர்களை விட அதிகம் வளர்ந்தவர்களையும், அதிகம் குள்ளமானவர்களையும் காணும்போது அவர்கள் மனதில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டாகிறது. அந்தக் கிளர்ச்சியே கேலியாக வெளிப்படுகிறது.

இதுபோலவே தலை, கண், காது, மூக்கு உதடு, பல், மார்பு, வயிறு, கை, கால், விரல் முதலிய அங்கங்கள். சராசரி மக்களுக்கு இருப்பதைவிட நீண்டோ, குறுகியோ, பெருத்தோ, சிறுத்தோ, இருப்பவர்களைக் கண்டால் மக்கள் அந்தந்த அங்கங்களைக் குறித்து பெரிய தலை, சிறியதலை, முண்டக் கண், இல்லிக்கண், ஆனைக்காது, ஒட்டுக் காது, நீண்ட மூக்கு, சப்பை மூக்கு, கோடாரிப்பல், பானை வயிறு என்பன போன்ற ஏதாவது சொல்லி பரிகசிப்பதும் இயற்கை! இந்த அளவு முறைகளெல்லாம் சராசரித் தோற்றம்தான் என்பதை மறந்துவிடலாகாது.

இவ்வாறு, அங்கங்களின் அளவு வித்தியாசம் ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் சற்று பேதப்பட்டிருக்கின்றன. அவைகளில் இரண்டொரு உதாரணம் கூறுவோம்:-

நீக்ரோ மக்களுக்கு உதடுகள் பெருத்து, முகவாய்க்கட்டை நீண்டு டார்வின் தத்துவத்திற்கு ஆதாரம் போல் இருக்கின்றன. இந்த முகவாய்க் கட்டையையும், உதடுகளையும், நீக்ரோவர் தவிர, எந்த நாட்டு மக்களும் விரும்ப முடியாது. அதோடு நீக்ரோக்களின் ஆண் குறியின் நீளம் அதிகம்! அவர்களைப் போலவே அராபியர்களுக்கும் ஆண்குறியின் நீளம் அதிகம்!

சீனர்கள், கண்கள் சிறுத்து, கன்ன எலும்புகள் உயர்ந்து காணப்படுகிறார்கள். நமது மக்களுக்கு கன்னங்கள் இரண்டிலும் 'பரு' என்கிற சிலந்தி உண்டாகி கொஞ்சம் வீக்கம் உண்டானால் முகம் எப்படி இருக்குமோ, அப்படிப் போலவே சீனர்களின் முகம் சாதாரணமாக இருக்கும்.

ஜப்பானியர்கள் குள்ளமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பற்கள் சற்று பெரிதாகக் காணப்படுகின்றன.

வடஇந்தியர்கள் பெருத்த தலையும், பருத்த கண்களும், படர்ந்த முகமும் உள்ளவர்களா யிருப்பதோடு, திராவிடர்களைவிட உயரத்திலும் கனத்திலும் அதிகமாக இருக்கிறார்கள்.

வடஇந்தியப் பெண்கள், தென்னிந்தியப் பெண்களைவிட ஆசனம் (பெருந் துடைக்குமேல் இடுப்புக்குக் கீழ் உள்ள பிரஷ்ட பாகம் பெருத்தவர்களாக இருக்கிறார்கள்.

அதிலும் சிறப்பாக பேரிளம் பெண் (ஏறக்குறைய 32 வயதுப் பெண்) பருவத்தினருக்கு, ஆசனப் பகுதி மிகவும் பெருத்து தோள்களின் அகலத்தைவிட விரிந்து பருத்த தொந்தியுடன் ஊன்குவியல்போல விகாரமாகக் காணப்படுகிறார்கள்.

துடியாய்ப் பிடியாய்ச் சுருதியால் வல்லிக்
கொடியாய் இளவல்லிக் கொம்பாய்—
வடிவடங்க
......................தேய்ந்த இடையினள்

என்று, பெண்களின் சிறிய இடையழகைப் பாடிய தமிழ்க் கவிஞர்கள் வட இந்தியப் பேரிளம் பெண்களைக் கண்டால், உண்மையில் விதிர் விதிர்த்துப் போவர்.

இதனால்தான், தற்காலக் கவர்னர் திரு ஸ்ரீ பிரகாசா "தமிழகத்துப் பெண்கள் அழகாக இருக்கிறார்கள்" என்று கூறித் திரிகிறார் போலும்! என்று கருத வேண்டாம். அவர், எவ்வளவுதான் புகழ்ந்தாலும், அதை வீண் முகஸ்துதி என்றே கூறவேண்டும்.

ஏனெனில், வடஇந்திய ஆடவரும் பெண்டிரும், அங்க அவயவங்களில் ஏருக்குமாறாக இருந்தாலும், நிறத்தைப் பொறுத்த மட்டில் கடைந்தெடுத்த தந்தம்போல் இருக்கிறார்கள்! அந்த நிறம் நம்நாட்டு 'வாடாத் திருமேனி'களாகிய பார்ப்பனர்களுக்குக்கூட இல்லை!

வடவர்கள் அந்த நிறத்தின் காரணமாகவே தென்னாட்டாரிடத்தில் ஒருவித அருவருப்புடன் நடந்து கொள்கிறார்கள் என்பதையும் நம்மவர்கள் உணரவேண்டும்!

ஒரே இரயில் வண்டியில் நாமும் வடவரும் பிரயாணம் செய்தால், நம்நாட்டுப் பார்ப்பனரைவிட வடவர்கள் நம்மிடத்தில் அதிகம் அருவருப்புக் கொள்கிறார்கள் என்பதை நேரில் காணலாம்.

(தொடரும்)

●

கைத்தறி ஆடையையே
அணியுங்கள்

நிலத்தையும் பணத்தையும் வீடுகளையும் பங்கீடு செய்ய வேண்டும்

பி. என். ராஜ்போஜ் யோசனை

●

தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவர் டெல்லிப் பாராளுமன்றத்தில் அரசியல் (4-வது திருத்த) மசோதாவின் மீது 15-3-55-ல் விவாதம் நடந்தபோது பி. என். ராஜ்போஜ் அவர்கள் :

"சிறுஅளவு சொத்துக்கள் உடையவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும், பழங்குடிகள் உட்பட லட்சக் கணக்கான மக்கள் ஒடுக்கப்பட்டு மிகவும் கொடுமையான அல்லல் வாழ்க்கை வாழ்கின்றனர். இவர்களுக்கு உடனடிப் பரிகாரம் செய்ய வேண்டியது தேவையாகும். பிரதமரிடமும் சோஷியலிச சமுதாயம் அமைக்கப்படுமென்று அவர் அடிக்கடி கூறுவதிலும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு நம்பிக்கையுண்டு; ஆனால் பிரதமர் ஒரே மூச்சில் முதலாளிகளுக்கும் ஏழைகளுக்கும் பாதுகாப்பளிக்கப்படுமென்று கூறிவருவதால், அவருடைய சோஷியலிச சமுதாய அமைப்பு எவ்விதம் சாத்தியப்படும் என்றுதான் ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் ஐயுறுகின்றனர்.

பெரும் எண்ணிக்கை மக்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளை சர்க்காரே எடுத்துக் கொண்டு, அப்பாட்டாளி மக்களின் சமுதாய—பொருளாதார நிலவரங்களை முன்னேற்றம் செய்ய வேண்டும். இப்போது தேவைப்படுவது என்னவென்றால், நிலம்—பணம்—வீடு ஆகியவைகளை எல்லாருக்கும் உரிய முறைப்படி பங்கீடு செய்ய வேண்டியதேயாகும்" என்று தெரிவித்தார்.

வேண்டுகோள்

●

27—3—55-ந் தேதியன்று கோவை தியாகராயர்படிப்பகத்தில் நடைபெறுவதாக இருந்த திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுச்சபைக் கூட்டம் நாடெங்கும் கிளைக் கழகங்கள்—நகரக் கிளைகள் தேர்தல் நடத்துமாறு தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளபடியால் 3-4-55-ந் தேதி காலை 9 மணிக்கு தியாகராயர் படிப்பகத்தில் நடைபெறும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. சுந்தரம்
அமைப்பாளர்

கைத்தறியாளர்களின் அவலநிலை நீங்க அறிஞர் அண்ணாவின் எடுத்துக்காட்டு.

ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கிறது என்று காமராசரே அறிவித்திருக்கிறார். "குறைகளைச்சொல்லுங்கள் நாங்கள் நிவர்த்திருக்கிறோம்" என்றும் காமராசர் சொன்னார். நான் சொல்லுகிறேன் கைத்தறியாளரின் இந்த அவல நிலைக்கு அரசாங்கமே காரணம் என்று.

"இரண்டு பெண்டாட்டிக்காரனைப் போல்" என்று நம்நாட்டில் பழமொழி உண்டு. ஆனால் சர்க்காரின் போக்கோ மூன்று பெண்டாட்டிக்காரன் நிலையில் உள்ளது.

ஒரு பக்கம் கதர் துணியை ஆதரிக்கிறார்கள். மற்றொரு பக்கம் மில் துணிகளை ஆதரிக்கிறார்கள் மூன்றாவதாக கைத்தறி துணிகளையும் ஆதரிக்கிறார்கள்.

கதர் துணியை கட்சிக் கொள்கைக்காக ஆதரிக்கிறார்கள். தேசிய போராட்டத்தில் ஆதரவு காட்டியதற்காக ஆலை அரசர்களிடம் அனுதாபம் காட்டும் வகையில் ஆலைத்துணி உற்பத்திக்கு பாதுகாப்பு கொடுக்கிறார்கள்.

கைத்தறி துணியை கைத்தறி நெசவாளரின் கண்ணீரைக்கண்டு கருணை காட்டும் வகையில் ஆதரிக்கிறார்கள்.

நாட்டில்உள்ள நல்லவர்களனை வரும் பலதரப்பட்ட அரசியல்கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி ஒளிவு மறைவின்றி விவாதித்து கைத்தறியாளர் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிரி நாடுகள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்ற நேருவின் அயல்நாட்டுக் கொள்கை அடிப்படையில் மில் துணியும், கைத்தறி துணியும் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள் இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது போலாகும்.

புலியையும் ஆட்டையும் சர்க்கஸ்காரன் ஒன்றாக நிறுத்தலாம். ஆனால் முடிவில் புலி சர்க்கஸ் காரனை சவுக்குடன் தின்று விழுங்கிவிடும்.

வேட்டி, சேலை உற்பத்தியை மில்களிடம் ஒப்படைக்காமல் கைத்தறியாளரிடமே பூரணமாக ஒப்படைப்பதுதான் நெசவாளர் கஷ்டத்தை தீர்க்கும் ஒரே வழி.

இதுபோன்ற வைபவங்களுக்கு வெறும் ஆளான என்னைப் போன்றவர்களை கூப்பிடாமல் மேற்படி யோசனையை அமுல் நடத்த மறுக்கும் டெல்லி மந்திரிகளை கூப்பிடுங்கள். வேலைப்பா

டமைந்த கைத்தறித் துணிகளை அவர்களிடம் காட்டுங்கள். அப்படியே பட்டினி கிடக்கும் நெசவாளர்களின் குடிசைகளுக்கு அவர்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டுங்கள்.

அரசாங்கம் மற்றவர்களிடம் கைத்தறி உடுத்துங்கள் என்று பிரசாரம் செய்வதை விட்டு ராணுவம், போலீஸ் ஆகிய இலாகாக்களுக்கு கைத்தறித் துணியையே வாங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என்று சென்னையில் நடைபெறும் கைத்தறி வாரக் கொண்டாட்டத்தின் மூன்றாவது நாள் (22—3—55) நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா பேசினார்.

தி. மு. க. கிளைகளின் தேர்தல்

சென்னை 42-வது வட்டம்

இக்கிளைக் கழகத் தேர்தல் கூட்டம் 27-3-55 ஞாயிறு மாலை 4-மணிக்கு, திருவல்லிக்கேணி நமச்சிவாய முதலித் தெரு 4 வது இல்லத்தில் (கழகப் பணிமனையில்) நடைபெறப் போவதால் இக்கிளையின் பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தருமாறு செயலாளர் நீலநாராயணன் கேட்டுக் கொள்கிறார்.

43-வது வட்டம்

மேற்படி கிளைக் கழகத்தின் தேர்தல் கூட்டம் 27-3-55 ஞாயிறு காலை 9 மணிக்கு மீர்சாகிப்பேட்டை (சைவ முத்தையா முதலி) வீதியிலுள்ள வள்ளுவர் வாசகசாலைக் கட்டிடத்தில் நடைபெறுமாதலால் 43-வது வட்ட கிளைக் கழகத்தின் பொது உறுப்பினர்கள் யாவரும் வருகை தரவேணுமாய் செயலாளர் மு. புரட்சிமணி கேட்டுக் கொள்கிறார்.

மூலக்கடை

கொடுங்கையூர் தி. மு கழகத் தேர்தல் கூட்டம் 27—3—55 ஞாயிறு காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறப் போவதால் இக்கிளையின் பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாது குறித்த நேரத்தில் வருகை தருமாறு செயலாளர் மு. இராசன் தெரிவித்துக் கொள்கிறார்.

பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை நகர தி மு. கழக செயற்குழு தேர்தல் கூட்டம் 27-3-55 ஞாயிறு காலை 9-30 மணிக்கு பட்டுக்கோட்டை பெரிய கடை வீதியிலுள்ள காடிகேராவ் மண்டபத்தில் நடைபெறுமாதலால் உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் க. ரெங்சாமி வேண்டிக் கொள்கிறார்.

குனியமுத்தூர்

குனியமுத்தூர் (கோவை மாவட்டம்) கிளையின் தேர்தல் கூட்டம் 27—3—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு தி. மு. கழகப் பணிமனையில் நடைபெறுமென்றும் உறுப்பினர் அனைவரும் வந்திருந்து தேர்தலை திறம்பட நடத்திக் கொடுக்குமாறும் செயலாளர் தங்க மாணிக்கம் கேட்டுக் கொள்கிறார்.

உதகை

உதகை நகர தி. மு. கழகத்தின் பொதுத்தேர்தல் காந்தல் கலைவளர்ச்சி மன்றத்தில் 27—3—55 பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறுமாதலால் உறுப்பினர்கள் தவறாது வரவேண்டுமாய் செயலாளர் பே. ஆறுமுகம் கேட்டுக் கொள்கிறார்.

நடக்க இருப்பவை

மாயூரம்

27-3-55 ஞாயிறு காலை 9 மணிக்கு க அருணாசலம் தலைமையில் நடராசன் நினைவு வாசகசாலை ஆண்டுவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு நகர் பூங்காவில ஆ. பழனிச்சாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும். இரு நிகழ்ச்சிகளிலும் கவிஞர் பாரதிதாசன் பேராசிரியர் க. அன்பழகன், நாஞ்சில் கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவர்.

ரெம்பூர் தி. மு. க.

துறையூர் அடுத்த ரெம்பூர் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவில் 27-3-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு குறிச்சிவீதி மாரியம்மன் கோயில் மைதானத்தில் மாபெரும் கூட்டம் நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், கிருஷ்ணசாமி, பி. ராமானுசம் பேசுவர்.

திண்டுக்கல் தி. மு. க.

27-3-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு வ. உ. சி. திடலில் மாபெருங்கூட்டம் நடைபெறும் தோழர் இளங்கண்ணன் தலைமையில் டி. கே. சீனிவாசன் பி. சமதர்மம் எம். சி., வ. வீரராசன் பேசுவர்.

கோவிலூர் தி. மு. க.

28—3—55 மாலை 6மணிக்கு கோவிலூர் பாண்டியனார் திடலில் க வீரபுத்ரன் தலைமையில் சி பி. சிற்றரசு, எம். எஸ். இராமசாமி, எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

'சுமைதாங்கி'

தோழர் மா. தங்கவேலர் அவர்கள் எழுதும் 'சுமைதாங்கி' தொடர்கதை இவ்வாரம் வெளியிட இயலவில்லை. அடுத்தவாரம் முதல் தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆ—ர்

கோவை நகர தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

கோவை நகர தி. மு. கழகத் தேர்தல் 27—3—55 மாலை 4-மணிக்கு தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி தேர்தலில் போட்டியிடும் தோழர்கள் 25—3—55 இரவு 9-மணிக்குள் நகர செயலாளரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்; மனுக்களை திரும்பப்பெற கடைசி நாள் (27—3—55) நடுப்பகல் 12-மணிவரை அனுமதிக்கப்படும்

உறுப்பினர் பட்டியல் தினசரி மாலை 6 முதல் இரவு 9மணிவரை கழக அலுவலகத்தில் பார்வைக்கு உள்ளது. அதில் மாற்றங்கள், திருத்தங்கள் சேர்க்க வேண்டியவைகள் இருந்தால் எழுத்து மூலமாக 25—3—55-க்குள் செயலாளரிடம் சேர்ப்பித்தால் கவனிக்கப்படும்.

தேர்தல் தினத்தன்று உறுப்பினர் பட்டியலில் இல்லாத நபர்கள் கண்டிப்பாக தேர்தலில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

14-ம் பக்கத்—தொடர்ச்சி

மாவட்டக் குழுவின் செயலாளராய்ப் பணியாற்றி வரும் கே. எம். கண்ணபிரானைப் பாராட்டி முதன்முதலாக தோழர் கே. கோவிந்தசாமி (முன்னாள் மாவட்ட செயலாளர்) பேசுகையில் இத்தனை ஆண்டுகளைவிட இந்த இரண்டு ஆண்டுகளில் சிறப்பிக்கத்தக்க வகையில் நிகழ்ச்சிகள் பல நடைபெற்றிருக்கிறது. இதைக்கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். தோழர் கண்ணபிரானை பாராட்டுகிறேன். அவர் செயலாளராயிருந்து பணியாற்ற வேண்டுமென்று நீண்டநாள் எனக்கு ஆசையிருந்து வந்தது. அந்த ஆசையை திறம்பட நிறைவேற்றிய தோழர் கண்ணபிரான் அவர்களையும் அவருக்கு துணையாயிருந்த முன்னாள் துணைச்செயலாளர் க. சிதம்பரம், இப்போதைய துணைச்செயலாளர் வி. இராமசாமி. பொருளாளர் கண்ணப்பன் ஆகியோருக்கு மீண்டும் எனது பாராட்டுதலையும் வணக்கத்தையும்தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

தூய்மையான எண்ணம் படைத்தவர்

அடுத்துத் தோழர் இளம்பரிதி பேசுகையில் அபிப்ராய பேதத்துக்காக விரோதமோ குரோதமோ கொள்ளாமல் அனைவரிடமும் கூடுமானவரை அட்புரிமையுடன் பழகிப் பணியாற்றிவந்த செயலாளர் கண்ணபிரானை மனமாரப் பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டார்.

பெருந்தகமை கொண்டவர்

பின்னர் தோழர் ஆர். டி. அரசு, செயலாளரைப் பாராட்டிப் பேசுகையில், நான் சில சமயங்களில் அதாவது கமிட்டியின் நடிவடிக்கைகளின்போது சற்று காரசாரமாகப் பேசி யிருப்பேன்; அது போலவே செயலாளரும் பதில் சொல்லியிருப்பார். ஆனால் நம் மாவட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் நிலைநிறுத்திய வகையில் செயலாளர் கண்ணபிரான் நடந்து கொண்ட விதத்தையும், பெருந்தகமையையும் நான் உள்ளபடியே மனமாரப் பாராட்டுகிறேன் என்று தெரிவித்தார்.

நான் பாராட்டப் போவதில்லை

அடுத்து தோழர் என். வி. நடராசன் பேசுகையில், நான் நமது மாவட்டச் செயலாளராயிருந்து பணியாற்றிய தோழர் கண்ணபிரானைப் பாராட்டப் போவதில்லை. மற்ற நண்பர்கள் பாராட்டிப் பேசியதைக் கேட்டு பூரிப்படைந்தேன். ஆனால் தோழர் கண்ணபிரானுக்கு ஒன்றினை நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டுகளில் அவர் செயலாளராயிருந்து பணியாற்றிய போது பெற்ற அனுபவத்தை அவர் தமது எதிர்காலப் பொதுவாழ்வுக்கு வழிகாட்டியாகக் கொண்டுத் தொண்டாற்ற வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டார்.

செயலாளரின் நன்றி

இறுதியாக செயலாளர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் பாராட்டுதலுக்குப் பதில் தெரிவிக்கையில் தமக்கு யாரிடமும் தனிப்பட்ட பகைமை உணர்ச்சி கிடையாதென்றும் அது போலவே தமக்குற்ற துணைபாக உறுப்பினர்கள் அனைவரும் இருந்துவந்ததை என்றுமே மறக்க முடியாதென்றும் சென்னை மாவட்ட தி மு. கழகம் கடந்த ஆண்டுகளில் சிறப்பான பணியை செய்திருக்கிறதென்றும் இக்குழுவிலுள்ள உறுப்பினர் அனைவரும் தந்த ஒத்துழைப்பும் கிளைக் கழகங்கள் தந்த ஆதரவுமேயென்றும் அதுபோலவே அடுத்து தேர்ந்தெடுக்கப்படப் போகும் செயலாளர் இதைவிட சிறப்புற பணியாற்ற அனைவரும் ஆதரவுதர வேண்டுமென்று ஆசைப்படுவதாகவும் தாம் ஒரு உறுப்பினராயிருந்து பணியாற்ற முடிவு செய்திருப்பதாகவும் கூறி அனைவருக்கும் தம் சார்பிலும் துணைச் செயலாளர் இராமசாமி பொருளாளர் கண்ணப்பன் சார்பிலும் நன்றி தெரிவித்தார்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் புகைப்படமும் எடுக்கப்பட்டது. இக்கமிட்டிக் கூட்டம் இரவு 12-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

"நட்சத்திரங்கள்" மறைவதேன்!

●

நம் நாட்டு திரைப்படத் துறையிலே ஈடுபட்டுள்ள நடிகர்களும் நடிகைகளும் திடீரென "நட்சத்திரங்களாக" மாறி காட்சி அளிப்பதும் பிறகு இருந்த இடமே தெரியாமல் பட உலகைவிட்டே மறைவதுமாக இருக்கின்றனர். இந்நிலை தென்னாட்டுத் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் நட்டமேயாகும்.

மேலை நாடுகளிலே புகழ் படைத்த நடிகர்கள் தங்களின் இறுதிக் காலம் வரை "நட்சத்திர" தரத்திலிருந்து குறையாமல் இருந்து வருவதை நாம் காண முடிகிறது. ஏன் வடநாட்டு நடிகர்களில் சிலரும் இப்புகழுக்கு உரித்தானவர்களாயிருந்து வருகின்றனர். ஆனால் தென்னாட்டுத் திரைப்பட நட்சத்திரங்களின் புகழ் அற்ப ஆயுளில் முடிவதேன்?

உதாரணமாக வடநாட்டுத் திரைப்படத் துறையிலே தோழர். பிரித்விராஜ், சொராப் மோடி போன்றவர்களின் புகழ் இன்றளவும் மங்கவில்லை. அது போலவே துர்கா கோட்டே, தேவிகாராணி, லீலா சிட்னிஸ் போன்ற நடிகைகளின் கீர்த்தி எந்த அளவிலும் குன்றவில்லை ஆனால் நம் நாட்டு 'நட்சத்திரங்கள்' இன்று மின்னுகின்றன. நாளை அடியோடு மறைந்து விடுகின்றன—காரணம் என்ன?

மேலை நாட்டு நடிகர்களும். தங்களின் பருவத்திற்கேற்ப தாங்கள் நடிக்கும் பாத்திரங்களின் முறையையும் மாற்றிக் கொள்கின்றனர். தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு, அப்பாத்திரங்களிலும் வெற்றி வாகை சூடுகின்றனர்.

தமிழ் நாட்டிலோ அதற்கு நேர்மாறான காட்சி! நமது நட்சத்திரங்கள் தங்களின் இளம் வயதில் எந்த வேடத்தில் நடிக்க முனைந்தனரோ அதே பாத்திரத்தில் தங்களின் முதிர்ந்த வயதிலும் நடிக்க விரும்புகின்றனரேயன்றி—தங்களின் பருவ மாற்றத்திற்கேற்ப நடிக்கப் பாத்திரங்களிலும் மாற்றம் ஏற்படுத்திக் கொள்வதை இழிவாகக் கருதுகின்றனர். இந்தத் தனிப்பட்ட "பெருமை"யானது நடிக — நடிகைகளின் புகழை மங்கவைப்பது ஒருபுறமிருப்பினும் நம் நாட்டுத் திரைப்படத் துறைக்கும் நட்டமாகும்.

உதாரணமாக தோழர். ராஜ்கபூர் தயாரித்த 'அவாரா' என்ற படத்தில் அவரின் தந்தை பிருத்விராஜ் சாதாரண வேடத்தில் தான் தோன்றினாரெனினும் முக்கிய பாகம் ஏற்று நடித்த ராஜ்கபூரைவிட பிருத்விராஜின் நடிப்புதான் மக்கள் மனதில் இடம் பெறுகின்றது. இதுபோன்ற சம்பவங்கள் பலவற்றை நாம் எடுத்துக் காட்ட முடியும்

கலை அரங்கம்

இன்னும் சொல்லப்போனால், மேலை நாடுகளிலும், வடநாட்டு திரைப்படங்களிலும் எப்பேர்ப்பட்ட கீர்த்தி வாய்ந்த நடிக நடிகைகளாயிருப்பினும் அவர்கள், நடிக்கும் போது தாங்கள் ஏற்றுள்ள பாத்திரம் எதுவோ அதிலே இரண்டறக் கலந்து நடிக்கிறார்களேயல்லாது தங்களின் தனிப்பட்ட பெருமைகளை மனதில் கொள்வதில்லை. ஆதலாலேதான் வெற்றி காணுகின்றனர். நம் நாட்டுத் திரைப்பட நடிக நடிகைகளில் பெரும்பாலோர் இக்கட்டத்திலும் நேர்மாறாகவே காட்சியளிக்கின்றனர்!

இவ்வாறு நாம் குறிப்பிடுவதால் மேலை நாட்டு அல்லது வடநாட்டு நடிகர்களைப் புகழ்ந்து நம் நாட்டு நடிகர்களைக் குறைவு படுத்துவதாக எவரும் கருதிவிடக் கூடாது.

மேலை நாட்டு நடிகர்களிடமுள்ள இச் சிறந்த அனுபவத்தை நம் நாட்டு நடிகர்களும் சற்று கவலையுடன் பின்பற்றுவார்களேயானால் திரைப்படத் துறையில், வடநாட்டவர்களைவிட நாம் முன்னிலையில் தலைநிமிர்ந்து நிற்க முடியும் என்பதற்காகவே இதனை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

நடிப்புத் துறையில் மட்டுமல்லாது, கதை வசனம் அமைப்பதிலிருந்து மற்ற ஒவ்வொன்றிலும் அதில் ஈடுபட்டிருப்பவர்கள் கடமையாற்றினால்தான் நம் நாட்டு திரைப்படத் துறையில் வெற்றி காண முடியுமென்பதுடன் அதனால் நாட்டுக்கும் நன்மை பயக்கும். இல்லையேல் இன்று வெளிவரும் படங்களின் தரத்துக்கும் கீழான நிலையில்தான் துரிதநடை போடவேண்டி யிருக்கும் என்பதை திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பணிவன்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நக்கீரன்

"ஒரு நாள்"

●

கொடுங்கையூர் கலைவளர் நடிக மன்றத்தின் 'ஒரு நாள்' என்னும் சமூக நாடகம் 20-3-55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு பெரம்பூர் நியூ ஹாலில் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில் அரங்கேற்றப்பட்டது.

நடிகத் தோழர்கள் அனைவரும் தி. மு. கழகத் தோழர்களும் அனுதாபிகளுமே யாவார்கள். இதுவே அவர்களின் முதல் முயற்சியானதால் நாடகத்தில் சில குறைபாடுகள் காணப்படினும் பாராட்டுதலுக்குரியவர்களாகிறார்கள். 'கொள்கையே இலட்சியம்' என்ற முறையில் நாடகம் அமைந்திருப்பதால் வேறு சிலரின் பாராட்டுதலைப் பெறாவிட்டாலும் திராவிட இயக்கத் தோழர்கள் அனைவராலும் பாராட்ட வேண்டிய தொன்றாகும்.

பாண்டியனாக நடித்த தோழர் நெடுமாறன், சேகராக நடித்த தோழர் இன்பரசன் ஆகியோர் தைரியமாகவும் மனதிலே எந்த சஞ்சலமும் இல்லாது நடித்திருந்தால் அவர்களின் முயற்சியை மேலும் சிறப்பித்திருக்கும் என்று எண்ணுகிறோம்.

வில்லனாக நடித்த தோழர் கே. கே. நாதன் எல்லாக் கட்டங்களிலேயும் வீரமாகவும்—கோபமாகவும் அதிக குரலுடனும் பேசியது. அவருக்கு கிடைக்க வேண்டிய புகழுக்குத் தடையாக இருந்தது—அவரின் கடைசி கட்டம்—கத்திக் குத்துக்கு ஆளாகி நிற்கும் காட்சி போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தது.

நகைச்சுவைப் பகுதியை ஏற்று நடித்த தோழர் சந்தோஷம் பொது மக்களின் பாராட்டுதலை பெற்றுக் கொண்டதுடன், 'அந்த நாடகமே' அத்தோழரின் நடிப்பினாலேயே தான் ஓரளவு வெற்றிகரமாக முடிந்தது என்று கூறின் மிகையாகாது.

தோழர் ஜெயராஜ் பிச்சைக்காரனாக நடித்த காட்சியினை போற்றத் தக்கதாகும். க்ஷயரோகியாக நடித்த எம். கே. சாமி, ஐயர்களாக நடித்த தம்பிதாசன், ஜி. எஸ். மணி, இன்ஸ்பெக்டராக நடித்த ஷெரீப், வழக்கறிஞராக நடித்த பி. எம். ராசன் ஆகியோர் கச்சிதமாக நடித்தார்கள். ஜமீந்தாராக நடித்த வி. எஸ். மணி, ரௌடியாக நடித்த வி. கே. ஆறுமுகம் ஆகியோரின் நடிப்பு மிகப்பொருத்தம்.

மற்றும் நடிகைகள் சாவித்திரி, சத்தியா ஆகியோரின் நடிப்பும் பாராட்டுதலுக்குரியதாகும்.

திரைக் கதை வசனம் எழுதி, பயிற்சி தந்த குளத்தூர் மணி அவர்களின் இம்முயற்சி பாராட்ட வேண்டிய நிலையிலிருந்தாலும், பெரிய கதையாக எழுதி பயிற்சிதந்து — நாடகத்தின்று காலமின்மையால் அக்கதையை சுருக்கி பல காட்சியினை நிறுத்திவிடுவதால், கதையில் கோர்வையில்லாமல்—கதையே புரியாமல் பொதுமக்களின் அதிருப்திக்கு ஆளாகும் முறையை மாற்றிக் கொண்டால் அவரின் முயற்சிக்கு வெற்றி கிட்டும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறோம்.

பாடல்கள் எழுதி இசை யமைத்துத் தந்த தோழர் மேகநாதன் அவர்களின் புகழுக்கு கேடு விளைவித்தது ஒலிபெருக்கியின் ஒழுங்கற்ற வேலை என்றால் ஆச்சரியமொன்றுமில்லை.

—மூர்த்தி

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

செயலாளர் கண்ணபிரானுக்கு உறுப்பினர்களின் பாராட்டு

செயற்குழுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் எடுத்த படம்

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 17—3—55 மாலை 7-மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் செயலாளர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. 50 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில் செயலாளர் பேசுகையில் அடுத்து கிளைக் கழகத் தேர்தல்களும் மாவட்டக் குழுத் தேர்தலும் நடைபெற இருப்பதால் அநேகமாக இதுவே இறுதிக் கூட்டமாயிருக்கலாமென்றும், எனவே நம் மாவட்டக் குழுவின் மீதுள்ள எல்லா பிரச்னைகளையும் விவாதித்து முடிவுசெய்ய வேண்டுமென்றும், அதற்கேற்ப உறுப்பினர்கள், குழுவின் நிகழ்ச்சியினை [illegible] கேட்டுக் கொண்டு சென்ற கூட்ட நிகழ்ச்சியினை வாசித்துக் கையெழுத்திட்டனர்.

சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் மார்ச்சு திங்கள் 4—13 ஆகிய இரு ஞாயிறுகளில் நடைபெற்ற சிறப்புக் கூட்டங்களின் வரவு செலவு விவரம் ஒப்படைக்கப்பட்டு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டதுடன், இறுதியாக சென்னை மாவட்டக் குழுவின் சென்ற இரண்டாண்டின் மொத்த வரவு—செலவு கணக்கில் (17—3—55 வரையில்) கையிருப்பு ரூ. 40-0-0 என்றும் குறிப்பிடப்பட்டது.

அடுத்தபடியாக பொதுச் செயலாளரின் அறிக்கைக்கேற்ப 27—3—55-ம் நாளன்று சென்னை மாவட்டத்திலுள்ள கிளைக்கழகங்களின் தேர்தலை நடத்திவைக்க தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்ற யிருக்கும் தோழர்களின் பெயர்களையும், தேர்தலை நடத்திவைக்க வேண்டிய முறைகளைப் பற்றியும் அதற்கான விவரங்களையும் செயலாளர் எடுத்துரைத்தார், பின்னர் மற்றும் சில பிரச்னைகளைப்பற்றி விவாதித்து முடிவு செய்யப்பட்டன.

செயலாளருக்குப் பாராட்டு

சென்ற 2½ ஆண்டுகளாக சென்னை

11-ம் பக்கம்

அச்சிட்டவர், ஆசிரியர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம் 1c. [illegible] மின் தெரு, சென்னை